விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ஈළநாடு




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 24.04.2021 சனிக்கிழமை | இதழ் : 144 | பக்கங்கள் : 16

# வீட்டிலிருந்து வெளியில் செல்ல இருவருக்கு மாத்திரமே அனுமதி

## நாட்டில் மூன்றாவது கொரோனா அலை புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, ஏப்.24

நாட்டில் மூன்றாவது கொரோனா அலைக்கு மத்தியில் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் மே 31 ஆம் திகதி வரை பொதுமக்கள் பின்பற்றவேண்டிய புதிய சுகாதார வழிமுறைகள் குறித்த அறிவிப்பே நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

15

பொலிஸார் மூவர் உட்பட

# யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வெள்ளிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக மருத்

15

# சமஷ்டி ஆட்சிக்கு வாய்ப்பு உண்டு!

## ஆயினும் தனிநாடு உருவாகாது என்கிறார் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, ஏப்ரல் 24

இலங்கையில் சமஷ்டி ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான சுசில் பிரேமஜயந்த ஆருடம் வெளியிட்டுள்ளார்.

15

# நாட்டை மீண்டும் முடக்கும் தீர்மானம் இதுவரை இல்லை

## இராணுவ தளபதி திட்டவட்டம்



கொழும்பு, ஏப்ரல் 24

எமது நாட்டு மக்கள் புத்திசாலிகள். தற்போதைய இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து மிகவும் பொறுப்புடன் அவர்கள் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள கொரோனா கட்டுப்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையிலும்கூட நாட்டை மீண்டும் முடக்கும் தீர்மானம் எதுவும் இதுவரை இல்லை என்றும் கூறினார்.

15

# எம்மை பயமுறுத்தி அடக்க முடியாது!

## அரசுக்கு ஹக்கீம் சவால்




கொழும்பு, ஏப். 24

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து எம்மை பயமுறுத்தி அடக்க முடியாது. முடிந்தால் செய்து பாருங்கள் என சவால் விட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அன்று ஜே.ஆர். செய்த நடவடிக்

15

# ஒரு இலட்சத்தை நெருங்கும் கொரோனா தொற்றாளர்!

## நேற்று 796 பேர் அடையாளம் இதுவரை 99,518 பேருக்கு உறுதி



கொழும்பு,ஏப்.24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை அண்மித்துள்ளது.

796 புதிய கொரோனா நோயாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என இராணுவத் தளபதியும், கொரோனா தடுப்பு செயல்பாட்டுக் குழுவின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 99 ஆயிரத்து 518 ஆக பதிவாகியுள்ளது. (அ-எ)



யாழ்.பல்கலை வளாகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

(விரிவான செய்தி 10 ஆம் பக்கத்தில்)

# உருமாறிய கொரோனா வைரஸ் கடும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்

கொழும்பு, ஏப்.24

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைத்தவுடன் சீன (சினோபார்ம்) தடுப்பூசிகளை இலங்கையர்களுக்கு வழங்க முடியும் என கொரோனா கட்டுப்பாட்டுக் குழு தெரிவித்ததுடன், மே மாதம் நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட

15

# அபாய கட்டத்தில் நாடு!

## மக்களிடம் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது அரசு என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஏப்.24

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

15

# சர்வதேச விசாரணை நியாயமானதென தனது செயல்பாட்டால் நிரூபிக்கும் அரசு

## சபையில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.24

கோட்டாபய அரசாங்கம் தமிழ் மக்கள் கோரும் சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளை நியாயமானவை என்பதை நிரூபிக்கும் வகையில் செயற்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசாங்கம் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்கி நியாயமான தீர்ப்பு முறையில் நம்பிக்கை இல்லை என்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

பதை உணர்த்தியுள்ளது. இதனைத்தான் தமிழ் மக்களும் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் கூறுகின்றனர் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் தமக்கு நம்பிக்கையில்லை என்பதை அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூலம் அரசாங்கம் இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டியுள்ளது.

இதனைத்தான் தமிழ் மக்களும் 2009ஆம் ஆண்டுமுதல் வலியுறுத்துகின்றனர். இதன் ஊடாக போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளே பொருத்தமானதாக அமையும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது.

நானும் எனது கட்சியும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள். இது தொடர்பில் நீதிமன்றில் போராடினோம் . நீதிமன்றில் வழக்குகளை தாக்கல் செய்தோம். அரசியல் ரீதியாக தூண்டப்பட்டே எமக்கு எதிரான பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் நான் தனிப்பட்ட ரீதியில் குற்றம்சாட்டப்பட்டிருந்தேன். பின்னர் விடுவிக்கப்பட்டேன். பின்னர் எனது நண்பர்மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நாட்டில் மோசமான ஒரு கலாசாரம் உள்ளது. அமையும் ஒவ்வொரு அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களுக்கு எதிராக நடவடிக்கையெடுப்பதே அது. தற்போதுள்ள அரசாங்கம் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்கி நியாயமான தீர்ப்பு முறையில் நம்பிக்கை இல்லை என்பதை உணர்த்தியுள்ளது. அரசாங்கமானது நீதிமன்றத்துக்குச் செல்லாது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாது முந்தைய அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆணைக்குழுவின் ஊடாக தீர்வு காண முற்படுகிறது.

அரசியல் பழிவாங்கல்களுக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்ய முடியும். அதே போன்று பல வழிமுறைகள் உள்ளன. ஆனால், விசேட ஜனாதிபதி ஆணைகுழுவை உருவாக்கி ஏன் எவ்வாறு செய்கின்றனர்?அரசாங்கத்துக்கு தமது சொந்த நீதித்துறையில் நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள முடியாதென்ற நம்பிக்கையின் பிரகாரமே ஆணைக்குழுவை உருவாக்கியுள்ளது.

இதனைத்தான் தமிழ் மக்களும் கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் கூறுகின்றனர். போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதால் சர்வதேச குற்றவியல் விசாரணையை கோரியுள்ளனர். ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் உள்ளக விசாரணை நடத்துவதாக அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால், இவ்வாறான விசாரணை ஆணைக்குழுக்களை உருவாக்கி அதே நீதிமன்றங்களை தவிர்ப்பதற்கு முற்பட்டுள்ளனர். ஆகவே, இந்த நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் இவர்களுடைய நீதித்துறையின் மேல் நம்பிக்கையில்லையென்பதை தெளிவாக எடுத்துக்கூறியுள்ளனர்.

இப்பொழுது நடப்பதை பார்க்கும் போது தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைவர். கடந்த சில ஆண்டுகளாக கையாளப்பட்ட நீதித்துறை முறைமையற்றதென விளங்கியுள்ளது. இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் கோரும் சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளை நியாயமானவை என்பதை நிரூபிக்கும் வகையில் செயற்பட்டுள்ளது. எல்லா விதத்திலும் சர்வதேச சமூகத்திற்கு இதனை நிரூபித்துக்கொண்டிருக்கிறது- என்றார்.

## சமஷ்டி ஆட்சிக்கு...

ஆயினும் ஒருபோதும் தனிநாடொன்று உருவாகாது எனறும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோது அவர் இதனைக் கூறினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை இரண்டாகப் பிரிகின்றதாகவும் தனிநாடு உருவாகின்றது என்றும் விமர்சனங்கள் வெளியிட ஆரம்பித்துள்ளனர். அப்படி இல்லை.

13ஆவது திருத்தம் மூலம் நாடு 9 மாகாணங்களாக பிரிக்கப்படுகின்றது. அதில் ஒன்றாகிலும் பிரிக்கப்பட்டால் நாட்டில் சமஷ்டி ஆட்சி ஏற்படும் என்பதை ஜே.ஆர் ஜயவர்தன கூறியிருந்தார். அப்படி பிரிவதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆளுநர் நீக்கப்பட்டால் அதற்கான வாய்ப்பு உள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கமையவே ஆளுநர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதனால் மாகாண சபைகளுக்கு நிறைவேற்றதிகாரம் இல்லை. அதனை பாராளுமன்றத்தின் ஊடாக குறைக்கவும் முடியும். மாகாணங்களுக்கு புறம்பான நீதிமன்றங்கள் இல்லை. மாவட்ட நீதிமன்றங்கள் நாட்டின் ஒட்டுமொத்த நீதிமன்றக் கட்டமைப்பிற்குள்தான் இருக்கின்றன. ஆகவே மாகாண சபை முறை வரும்போது அன்று கைகளை உயர்த்தியவர்கள் இன்று நாடு பிரிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். எதிர்க்கட்சியினர் தெரிவிப்பது போல கொழும்பு போர்ட் சிற்றி திட்டம் சீனக் கொலனியாகாது, தனிநாடாகவும் மாறாது. தற்போது நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களில் 07 சட்டங்களைத் தவிர 57 சட்டங்கள் அந்தத் திட்டமுள்ள பகுதியில் அமுலாகும்-என்றார்.

## அபாய கட்டத்தில்...

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு என சட்ட விதிமுறைகள் இன்றி மக்களின் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தவே எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நாடு தற்போது அபாய நிலையிலுள்ளது. எனவே, அதற்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்கான சகல வேலைத்திட்டங்களும் அரசாங்கம், சுகாதார அமைச்சு ஏனைய சுகாதார தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் எத்தகைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில்கூட தற்போது கட்டுப்படுத்த முடியாதளவுக்கு வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது.

எமது அயல் நாடான இந்தியாவிலும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் காணப்பட்டதை விட தற்போது உருமாறிய வைரஸ் பரவலே இதற்கான காரணமாகும். இது எமக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும்.

எனவே, இந்த சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு ஒவ்வொரு பிரஜைகளும் தமது கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

எனவே இம்முறை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அல்லது போக்குவரத்து கட்டுப்பாடு என்பவற்றை விதித்து சட்டத்தின் மூலமாக அன்றி, முழுமையாக மக்களின் ஒத்துழைப்புடன் நிலைமையை கட்டுப்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும்- என்றார். (அ-எ)

## வீட்டிலிருந்து...

இதன்படி, அத்தியாவசிய தேவைகள் தவிர ஏனைய செயல்பாடுகளுக்காக வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கு இரண்டு பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பஸ், ரயில் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்துகளில், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் ஏற்றப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கார் மற்றும் ஒட்டோவில் பயணிக்கக் கூடிய ஆட்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமைய பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச மற்றும் தனியார் நிறுவனங்களில், தேவைக்கு ஏற்றவாறு பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்தவும் பல சந்தர்ப்பங்களில் வீடுகளிலிருந்து பணிபுரிவதற்கான செயல்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ)

## உருமாறிய...

கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பமாகும் என்றும் கூறியுள்ளது.

இந்நிலையில், உருமாறிய கொரோனா வைரஸ் கடும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரித்துள்ளது. (அ-எ)

## நாட்டை மீண்டும்...

தற்போதைய கொரோனா பரவல் நிலைமையடுத்து அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை முடக்குவதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் தற்போதைய சூழ்நிலையில் நாம் மேற்கொள்ளவில்லை.

நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமல் இருப்பார்களாயின் நாட்டை முடக்க வேண்டிய நிலை எதிர்வரும் நாள்களில் ஏற்படும்.

எனவே, தற்போதைய சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அனைத்து மக்களும் வேறு பிரதேசங்களுக்கோ, அல்லது பொது இடங்களுக்கோ, பொது நிகழ்வுகளிலோ கலந்துகொள்வதைத் தவிர்த்து அவரவர் வீடுகளிலிருந்து ஒத்துழைப்பு வழங்குங்கள்.

தமிழ் - சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் முறையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாமையே, தற்போதைய கொரோனா பரவல் நிலைமைக்குக் காரணமாகும்.

எமது அயல்நாடான இந்தியாவில் 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் நாளொன்றுக்கு கொரோனா தொற்றால் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

உலக நாடுகளிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. எனது நாட்டில் புத்தாண்டு வரை நாளாந்தம் 150 முதல் 200 பேர் வரை கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். கடந்த காலங்களில் நாம் கொரோனா தொற்றை மக்களின் ஒத்துழைப்பால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது.

புத்தாண்டு நிறைவடைந்தவுடன் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 300 இற்கு மேல் அதிகரித்தது. நேற்று முன்தினம் 600 பேர் வரை கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தனர்.

இதேவேளை, குளியாப்பிட்டி, கணேவத்தை, வத்தளை ஆகிய பகுதிகளில் அதிகமானோர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மேலும், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி ஒன்றே தீர்வு.

இக்காலப்பகுதியில் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதோடு, இயன்றளவு சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசம் அணிந்துகொள்வதோடு வீடுகளிலிருந்து வெளியேறுவதைக் குறைத்துக்கொள்ளவும்.

எனவே, நாட்டை முடக்கியோ அல்லது கொரோனா ஊரடங்கை விதித்தோ நாம் கொரோனாவை கட்டுப்படுத்த வேண்டியதில்லை. எமது நாட்டு மக்கள் புத்திசாலிகள். நாட்டு மக்கள் தற்போதைய நிலையை உணர்ந்து மிகவும் பொறுப்புடன் செயல்படுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார். (அ-எ)

## யாழ்ப்பாணத்தில்...

துவபீட ஆய்வுகூடம் என்பனவற்றில் 636 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே, 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோல், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவர், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வர் நேற்று தொற்ளார்களாக அடையாளம் காணப்பட்டனர். இதேவேளை, நல்லூர் சுகாதார மருத் துவ அதிகாரி பிரிவில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் திரு நெல்வேலி பாரதிபுரம் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

அத்துடன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ-03)

## எம்மை பயமுறுத்தி...

கையால் இறுதியில் ரணில் விக்ரமசிங்க மக்களிடம் மன்னிப்பு கோரினார் எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சட்டத்தின் ஆட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணிகள் 11பேர் கூட்டாக சுட்டிக்காட்டியுள்ளனர். இது சாதாரண விடயமல்ல. அதேபோன்று அரசாங்கத்துக்கு ஆதரவாக இருக்கம் பலரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். அரசாங்கத்தில் இருக்கும் சிலர் கடந்த காலத்தில் நீதிமன்ற தீர்ப்பினால் தண்டனை அனுபவித்ததை இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தீர்த்துக்கொள்ளக்கூடாது. அதற்கு மாற்று வழிகள் இருக்கின்றன. நீதிமன்றங்களுக்குச் சென்று தங்களது நியாயத்தை முன்வைக்கலாம்.

மேலும் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களினால் அரசியல் பழிவாங்கல்கள் இரண்டு தரப்பினராலும் ஏற்பட்டிருப்பதாக வரலாற்றில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது. இது புதிய விடயமல்ல. ஆனால் அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகும் அரச அதிகாரிகள் தொடர்பில் யாரும் கதைப்பதில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட பல அரச அதிகாரிகள் இருக்கின்றனர்.

அத்துடன் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பதன் தேவை என்ன? இந்த நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் பலரை இக்கட்டான நிலைக்கு ஆளாக்கி இருக்கின்றது.

சட்டமா அதிபரே இது தொடர்பாக தனது எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றார். வழக்கு விசாரணை செய்யும் நீதிபதிகளையும் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றது. அதனால் அரசின் இந்த நடவடிக்கை நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், நாட்டில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கும்போது அது எதற்கு என அனைவருக்கும் தெரியும். பாராளுமன்றத்தில் இதுதொடர்பாக நாங்கள் பேசும் போது அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே எம்மை பார்த்து, ஏன் பயமா என கேட்டு பயமுறுத்த பார்க்கின்றார். எம்மை பயமுறுத்தி அடக்க முடியாது. முடிந்தால் செய்துபாருங்கள். அன்று ஜே.ஆர். செய்த நடவடிக்கையால் இறுதியில் ரணில் விக்ரமசிங்க மக்களிடம் மன்னிப்பு கோரினார். அவ்வாறான பயங்கரமான விடயங்களை மேற்கொள்ளத்தேவையில்லை. அதற்காக நாங்கள் பயப்படவும் மாட்டோம்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர்ட்சிற்றி' சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவு!

## தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பப்பட்டது

கொழும்பு, ஏப். 24

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதற்கமைய, இதன் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.**

குறித்த மனுக்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் நேற்று ஐந்தாவது நாளாக உயர்நீதிமன்றில் இடம்பெற்றது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய, புவனெக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் வஜிர அபேவர்த்தன, பாலித்த ரங்கேபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மாற்று கொள்கை கேந்திரம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, தகவல் தொழிநுட்ப தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவரான பொறியியலாளர் ஜீ.கபில ரேணுக பெரேரா உள்ளிட்ட தரப்பினர்களால் சுமார் 20 மனுக்கள் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 1,000 தேசிய பாடசாலைகளை நிறுவும் திட்டம் ஆரம்பம்!

கொழும்ப, ஏப். 24

புதிதாக ஆயிரம் தேசிய பாடசாலைகளை நிறுவும் திட்டத்தின் முதலாவது கட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மாகாணங்களிலும் புதிய தேசிய பாடசாலை உருவாக்கப்படும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் சியாம் பலாண்டுவ மகா வித்யாலயாவில் நடைபெறவுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

முதல் கட்டத்தில், தேசிய பாடசாலைகள் இல்லாத 123 பிரதேச செயலக பிரிவுகளில் புதிதாக தேசிய பாட சாலைகளை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அனைத்து பிரதேச செயலகத்திலும் தலா 2 தேசிய பாடசாலைகள் நிறுவப்படவுள்ளன. (ஐ)

# தபால் திணைக்களத்துக்கு 3,000 பேர் இணைப்பு

கொழும்ப, ஏப். 24

தபால் திணைக்களத்துக்கு புதிதாக 3,000 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள், மாகாண மட்டத்திலேயே இணைக்கப்பட்டனர் என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

கனிஷ்ட தபால் சேவைக்காக, நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையிலேயே புதிதாக ஊழியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தபால் விநியோகம், அலுவலக உதவியாளர்கள் போன்ற பணிகளுக்காக இவர்கள் தபால் திணைக்களத்தில் இணைக்கப்பட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மேலும் 151 பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஏப். 24

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 151 நோயாளர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அதனால் கொரோனா தொற் றுக்குள்ளாகி பூரண குணமடைந் தவர்களின் மொத்த எண்ணிக்கை 94,036 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 4,052 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கண்ணுக்கு முதலிடம் சேவை திட்டம் நாளை!

கிளிநொச்சி, ஏப். 24

"கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவைத் திட்டம்" நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பூநகரி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

லயன்ஸ் மாவட்டம் 306பி1 ஆளுநர் மாவட்ட சபையின் பிரதி செயலாளர் மருத்துவர் எம். கதிர்காமநாதனால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்நிகழ்வில், பூநகரி பிரதேசத்தின் நலிவுற்ற மக்களுக்கு தகுதி வாய்ந்த கண் பரிசோதகர்களால் பரிசோதித்து வாசிப்பதற்குரிய மூக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு, மானிப்பாய் வட்டம், மன்னார், கிளிநொச்சி, மல்லாவி லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கண்பரிசோதனை முகாமில் பங்கேற்பவர்கள் தற்போதைய சூழ்நிலை கருதி சுகாதார விதிகளை பின்பற்றி பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் கட்டப்பட்டு திடீரென்று உலக கவனத்தைப்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீண்டும் அதே இடத்தில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாக தூபி ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது இன்று உலகம் அறிந்த செய்தி. அது திடீரென்று சர்ச்சைக்குரிய வகையில் உபவேந்தரால் இடிக்கப்பட்டிருக்காவிட்டால் இதற்கு இவ்வளவு பிரபல்யம் கிடைத்திருக்குமோ தெரியவில்லை.

இரவோடிரவாக அதனை இடித்து அழித்தபோது, உபவேந்தர் கூறியது, தான் அப்படிச் செய்திருக்காவிட்டால் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மட்டுமன்றி பொங்குதமிழ் நினைவாக இருக்கும் தூபியும் கூட அரச தரப்பினரால் இடிக்கப்பட்டிருக்கலாம் என்று.

சிறிலங்கா அரசாங்கங்களைப் பொறுத்தவரை, தமிழர்கள் மத்தியில் தனிநாடு கோரி, ஓர் ஆயுதப் போராட்டம் நடைபெற்றது என்பதற்கான எந்த அடையாளங்களையும் விட்டு வைக்க விரும்பவில்லை என்பதை அவர்களின் நடவடிக்கைகளில் கண்டுகொள்ளலாம்.

ஆனையிறவில் யுத்தவெற்றியை குறிக்கும் ஒரு நினைவுத்தூபி இருக்கின்றது. அதன் திறப்பு விழா முடிவடைந்த சில மணி நேரங்களில் அந்த இடத்தால் பயணித்த போது, இலங்கையை நான்கு கைகள் தூக்கிப் பிடித்திருப்பதைப் போன்ற அந்த சின்னத்தைப் பார்த்து தனது மகிழ்ச்சியை அங்கு நின்ற ஓர் இராணுவ அதிகாரியிடம் சுட்டிக்காட்டியது ஞாபகம் வருகின்றது.

'நல்ல சிந்தனை இது, இலங்கையை நான்கு கைகள், சிங்களவர்-தமிழர்-முஸ்லிம்கள்- பேகர் என்று நான்கு இனங்களும் சேர்ந்து தூக்கிப்பிடிப்பதை சித்திரித்திருக்கிறீர்கள்' என்று ஊர்க்குருவி அந்த அதிகாரிக்கு சொன்ன போது அவர் இடைமறித்து, 'இல்லை இல்லை, அந்த கைகள் நான்கு படையினரையும் குறிக்கின்றது' என்றார் அந்த அதிகாரி. ஆக, அரசாங்கம் எத்தகைய நிலையில் இருக்கின்றது என்பதற்கு உதாரணத்திற்காகவே இதனை குறிப்பிட்டோம்.

முள்ளிவாய்க்காலில் மே பதினெட்டாம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயுதப் போராட்டத்தில் தமது உயிர்களை இழந்தவர்கள் எத்தனைபேர் என்பது நம்மிடம் சரியாக இல்லாவிட்டாலும், ஆயிரக்கணக்கானவர்கள் மரணித்தார்கள் என்பது கேள்விக்குரியது அல்ல. ஆனால், மே பதினெட்டில் எந்த நினைவை அனுஷ்டித்தாலும் அரசாங்கத்திற்கு ஞாபகத்திற்கு வருவது என்னவோ அன்றைய தினம் மரணித்த முக்கிய பிரமுகர்கள் பற்றியே.

அதனால்தான் முள்ளிவாய்க்கால் நினைவு என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றது.

தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் என்ற பெயரில் நினைவுத்தூபி அமைக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். அதனை நிறுவுவதில் மிகப்பெரிய பங்களிப்பை செய்தவர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் கணவர் நடராஜன் என்பது குறிப்பிடத்தக்கது.

நடராஜனுக்கும் ஜெயலலிதாவுக்குமிடையே ஏற்பட்ட மோதல், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை ஜெயலலிதா இடித்தழிப்பதற்கு காணமானது. ஆக, அந்த இருவருக்கும் இடையேயான தனிப்பட்ட மோதல் காரணமாகவே அந்த பாரிய நினைவு முற்றம் தமிழக அரசால் (அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவால்) இடித்து அழிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கட்டப்பட்ட நினைவுத்தூபி, இடித்தழிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி, அது மீண்டும் கட்டப்படுவதற்கு காரணமாகியது.

இந்த விடயத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி பாராட்டுக்குரியதே. அதன் திறப்புவிழாவை எந்தவித அரசியலுமின்றி நடத்தி முடித்ததும் அவர்களின் திறமைக்கு சான்று. ஆனால், இந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இழுத்தழிக்கப்பட்டபோது, தெற்கில் பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பி. இதுபோன்ற நினைவுச்சின்னங்களை அமைத்திருப்பதை சுட்டிக்காட்டிய நம்மவர்கள் தெற்கிற்கு ஒரு நீதி, வடக்கிற்கு ஒரு நீதியா என்று கேட்டிருந்தது ஞாபகம்.

ஆனால், அங்கே ஜே.வி.பி. கட்டியுள்ள நினைவுச் சின்னங்கள், இதுபோன்ற சம்பவங்களில் பலியான பல்கலைக்கழக மாணவர்களின் நினைவாக மட்டுமே. அந்த நினைவுச் சின்னங்களில் மாணவர்களின் பெயர்கள்கூட பொறிக்கப்பட்டிருக்கின்றன. நாமும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அமைக்கின்றபோது, அந்த துயரச் சம்பவத்தை நினைவுபடுத்தும்வகையில் வரலாற்றை எழுதிவிட்டு, அந்த படுகொலை சம்பவங்களில் பலியான பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் நினைவாக அமைக்கப்பட்டது என்று பதிவுசெய்திருப்போமானால், எந்தக் காலத்திலும் அதில் யாரும் கைவைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

- ஊர்க்குருவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.04.2021 சனிக்கிழமை
சார்வரி, சித்திரை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சரத் பொன்சேகாவின் வாக்குமூலம்

முன்னாள் இராணுவ தளபதியும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா, மிருசுவில் படுகொலையை செய்தவர்கள் இராணுவத்தினர்தான். இதில் தண்டனை வழங்கப்பட்டவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை தவறு என்று, தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்திருக்கின்றார். கொலைகாரர்கள் கொலைகாரர்கள்தான். அவர்களை விடுவித்துவிட்டு, இராணுவ வீரர்களை விடுவித்துவிட்டதாக கூறமுடியாதென்றும் பொன்சேகா தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் சுமந்திரன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்ற எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பொன்சோகாவை பாராட்டியிருக்கின்றனர்.

2000ஆம் ஆண்டு, இடம்பெயர்ந்திருந்த நிலையிலிருந்த 8 தமிழர்கள், தமது வீடுகளை பார்வையிடுவதற்காக மிருசுவிலுக்கு சென்றிருந்தனர். இவர்களே படுகொலை செய்யப்பட்டு, பின்னர் புதைக்கப்பட்டனர். அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மாவை சேனாதிராசா, அங்கு உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் இருப்பதாகவும், அங்கு மனிதப் புதைகுழியிருப்பதற்கான வாய்ப்பிருக்கின்றது, எனவே, அதனை ஆராய வேண்டுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனடிப்படையில் இந்த விடயம் மனித உரிமைகள் அமைப்புக்களின் கவனத்திற்கு வந்தன. இதுதொடர்பான ஆரம்ப விசாரணைகள் அநுராதபுர நிதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று, பின்னர் கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

சுமார் 13 வருடங்களாக நிலுவையிலிருந்த மேற்படி வழக்கு, 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2015 ஜுன் மாதத்தில் இடம்பெற்ற விசாரணைகளில், இராணுவத்தினரே இந்தப் படுகொலையை மேற்கொண்டனரெனவும், இதனடிப்படையில் குறித்த இராணுவ குழுவில் இயங்கிய சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தகு விசாரணையாக இது போற்றப்பட்டது. ஆனால், 2020இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுனில் ரத்நாயக்கவை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தார். மனித உரிமை அமைப்புக்கள் இதனை கடுமையாக ஆட்சேபித்திருந்தன. குற்றவாளிகளை தண்டிப்பதில் அரசாங்கத்திற்கு எவ்வித நாட்டமுமில்லை என்பதற்கான உதாணரமாகவே, இந்த விவகாரம் சர்வதேச அளவில் நோக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பிலேயே பொன்சேகா பாராளுமன்றத்தில் கண்டித்திருத்திருக்கின்றார். பொன்சேகா, விடுதலை புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, இராணுவ தளபதியாக இருந்தவர். விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதில் முதன்மையான பங்கை வகித்தவர். இன்றுவரையில், இராணுவம் போர் குற்றங்களில் ஈடுபட்டதை முற்றிலுமாக மறுத்து வருபவர். விசாரணைகளை எதிர்கொள்ள தயங்கவேண்டியதில்லை. ஏனெனில், "எமது இராணுவம் குற்றமிழைக்கவில்லை" என்பதே பொன்சேகாவின் நிலைப்பாடாக இருக்கின்றது.

போர் குற்ற விவகாரத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டவர். ஆனால், சில விடயங்களை பொன்சேகா ஏற்றுக்கொள்கின்றார். அதாவது, யுத்த களத்திற்கு வெளியில் நிகழ்ந்த குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் பென்சேகாவிடம் உடன்பாடுண்டு. ராஜபக்ஷக்களின் எதிரியாக மாறிய பின்னர், கூட்டமைப்புடன் நெருக்கமான தொடர்புகளை பேணிவரும் பொன்சேகா, மிருசுவில் படுகொலையில் தமது இராணுவம் ஈடுபட்டிருந்தது உண்மைதான் என்பதை ஒப்புக் கொண்டிருப்பதை முக்கியமானதொரு விடயமாகவே பலரும் பார்க்கின்றனர். ஆனால், நாளை பொன்சேகா அதிகாரத்தில் அமர்ந்தால், அப்போது இராணுவம் தொடர்பில் எவ்வாறான முடிவை எடுப்பார்?

# உண்மைகளை வெளிப்படுத்திய பீல்ட் மார்ஷலின் சீற்றம்!

- அலசுவது **இராஜதந்திரி** -



இலங்கை இராணுவத்தின் முதலாவது பீல்ட் மார்ஷல் என்ற பெருமையைப் பெற்றவரான பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வியப்பைத்தரும் வகையில், இராணுவத்தினரால் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட சில மோசமான கொலைச் சம்பவங்கள் குறித்த தகவல்களை துணிகரமான முறையில் வெளியிட்டிருந்தார். சரத் பொன்சேகா குறிப்பிட்ட இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட படுகொலைச் சம்பவங்கள், அவர் இராணுவத்தில் பணியாற்றியபோது இடம்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சரத் பொன்சேகா குறிப்பிட்டவை உண்மையிலேயே நீதி நியாயத்தை மனதில் நிறுத்தி அவரால் சொல்லப்பட்டவையா அல்லது யுத்தம் முடிந்த தறுவாயில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்ததையடுத்து அவரது அரசியல் எதிரிகள் அவர்மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தி, இரு வருட காலம் அவரை சிறைவாசம் அனுப்பிவைத்ததை சகிக்கமுடியாது குறிப்பிட்டவையா என்றே எண்ணவேண்டியுள்ளது.

ஏற்கனவே, இராணுவத்தினர் மேற்கொண்டனர் எனக் குறிப்பிடப்படும் பல தரப்பட்ட குற்றச்சாட்டுகளை நிராகரிக்காதவராக, இராணுவத்தினர்மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டவராக சரத் பொன்சேகா இருக்கின்றார்.

**மிருசுவில் படுகொலைகள்**

இத்தகைய பின்னணியிலேயே, மிருசுவிலில் இராணுவ சிப்பாய் ஒருவரால் சிலர் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், திருகோணமலையில் 11 மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் விசாரிக்கப்படவேண்டுமென சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கைமீது யுத்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில், மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது இராணுவத்தில் பணியாற்றியவரே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. இளம் அதிகாரியாக இருந்து, யுத்தம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதியிலேயே படிப்படியாக தமது பதவி உயர்வுகளை பெற்று, பின்னர் வடக்கு - கிழக்கு யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் இராணுவ தளபதியாகவும், இலங்கையின் முதலாவது பீல்ட் மார்ஷல் என்ற கௌரவத்தையும் சரத் பொன்சேகா பெற்றவராக இருக்கின்றார்.

எனவே, வடக்கு- கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நீதி வேண்டிநிற்கும் ஆயிரக்கணக்கான மக்கள் இலங்கைப் படையினர்மீது சுமத்திவருகின்ற குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்துவதாகவும், அத்துடன் அவர்கள் வேண்டிநிற்கின்ற சர்வதேச நீதி விசாரணையை நியாயப்படுத்துவதாகவும் சரத் பொன்சேகாவின் கருத்துகள் அமைந்துள்ளன. அவர் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானவை, மிருசுவிலில் எட்டுப்பேரை கழுத்தறுத்துக் கொலைசெய்த இராணுவ சிப்பாய் சுனில் ரத்நாயக்காவை விடுதலை செய்துள்ளமையாகும்.

இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தம் வடக்கு-கிழக்கில் சூடுபிடித்திருந்தவேளை, இராணுவத்தினரும் தனிப்பட்ட முறையில் பல மோசமான குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டிருந்தனர். இதனை சரத் பொன்சேகாவும் அண்மையில் ஏற்றுக்கொண்டிருந்தார். இவை யாவற்றுக்கும் மேலாக, சரத் பொன்சேகா இராணுவ தளபதியாக பதவியேற்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் ஒரு முக்கிய இராணுவ அதிகாரியாக பணியாற்றியிருந்தார். அச்சமயத்திலேயே சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி குமாரசாமியும் அவரது தாயாரும் செம்மணி பிரதேசத்தில் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**புத்த பகவானின் போதனை**

எனவே, தற்போது ஓர் அரசியல்வாதியாக இராணுவத்தினர் புரிந்த குற்றச்செயல்களை துணிச்சலுடன் குறிப்பிட்டு வரும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவர் குறிப்பிடுகின்ற குற்றச்செயல்கள் உட்பட, யாழ்ப்பாணத்தில் அவர் பணியாற்றிய காலப்பகுதியில் கொலையுண்ட மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாயார் ஆகியோரின் மரணங்கள் குறித்து எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பதையும் வெளிப்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்கள் நீதி நியாயத்தைப்பெற உதவுவாரா? என்ற கேள்வியும் மேலோங்கி நிற்கின்றது.

சரத் பொன்சேகா குறிப்பிட்ட துணிச்சலான தகவல்களை நோக்கும்போது, புத்த பகவான் தமது போதனையில் குறிப்பிட்டுள்ளவையே நினைவுக்கு வருகின்றன. புத்த பகவான் குறிப்பிட்டது இதுதான்: 'உண்மை, சூரியன், சந்திரன் என்பவற்றை ஒருபோதும் மறைத்துவிட முடியாது. அவை எப்போதும் எக்காலத்திலும் ஒளிவீசி, தம்மை வெளிப்படுத்துபவையாகவே இருக்கும்,' இந்நிலையில், சரத் பொன்சேகா குறிப்பட்டவைகூட உண்மைக்கு அழிவில்லை என்பதையே சுட்டிக்காட்டி நிற்கின்றன.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 24 சனிக்கிழமை
பிலவ வருடம் - சித்திரை 11
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

24.04.2021

**மேடம்**
நினைத்தது நிறைவேறும் நாள். உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். தொழில் சம்பந்தமாக நண்பர்கள் ஆலோசனை கைகொடுக்கும். அரசுவழிச் சலுகை எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

**இடபம்**
அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. பயண வாய்ப்புகளில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**
நம்பிக்கை நடைபெறும் நாள். நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும். கரைந்த வங்கிச் சேமிப்பை ஈடுகட்டும் முயற்சி வெற்றி தரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர்.

**கடகம்**
உத்தியோக முன்னேற்றம் ஏற்படும் நாள். திட்டமிடாத காரியமொன்று திடீரென்று முடிவடையும். வரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்**
ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நாள். அரசியல் ஈடுபாடு நன்மை தரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொலைபேசி வழியில் வரும் தகவல் தொழிலுக்கு உறுதுணை புரியும்.

**கன்னி**
சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய செய்தி வந்து சேரும். பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடருவீர்கள். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் நாள். தொழிலில் புதிய கூட்டாளிகளைச் சேர்க்கும் எண்ணம் உருவாகும். வரவேண்டிய தொகை வந்து சேரும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். நாட்டுப்பற்று மிக்கவர்களால் நன்மை ஏற்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தொலைபேசிவழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு**
வரவு திருப்தி தரும் நாள். தொழில்போட்டிகளைச் சமாளிப்பீர்கள். தொல்லை தந்தவர்கள் விலகுவர். அன்னிய தேச அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும். பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**மகரம்**
யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். வாங்கல் கொடுக்கல்களில் கவனம் தேவை. நட்பு பகையாகாமல் இருக்க நாவில் கவனம் செலுத்துவது நல்லது. பயணங்களில் விழிப்புணர்ச்சி தேவை.

**கும்பம்**
யோகமான நாள். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். எடுத்த காரியங்கள் எளிதில் முடிவடையும். உயர் அதிகாரிகளின் பாராட்டுகளால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**மீனம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். வாங்கல் கொடுக்கல்களில் ஏற்பட்ட விரோதங்கள் விலகும். வீடு கட்டும் பணி தொடரும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து லாபம் வர வழிகாட்டுவர்.

# தோல்வி பயத்தில் உளறும் தி.மு.க.!

## ராஜா காட்டம்

காரைக்குடி, ஏப். 24

''சட்டசபை தேர்தல் முடிவுகள் வரவுள்ள நிலையில் தோல்வி பயத்தில் தி.மு.க. - கூட்டணி கட்சியினர் உளறுகின்றனர்'' என காரைக்குடியில் பா.ஜ. முன்னாள் தேசிய செயலாளர் எச்.ராஜா தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக உள்ளன. புதுச்சேரி அசாம், கேரளாவில் தேர்தல் முடிந்துவிட்டது. எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் தி.மு.க. காங். கட்சியினர் மற்றும் கமல் ஆகியோர் ஆட்டம் போடுகின்றனர். வாக்கு இயந்திரத்தை 'ஹேக்'



செய்ய முடியாது. தேர்தல் ஆணைக்குழு அனைத்து கட்சிகளையும் அழைத்து பேசிய போது எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

வாக்குப் பெட்டிகளை 'ஹேக்' செய்ய முடியும் என்றால் பாராளுமன்றதேர்தலில் ஏன் 38 தொகுதியில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வென்றது. சட்டசபை தேர்தல் தோல்வி பயத்தில் தி.மு.க. - காங்கிரஸ் கட்சியினர் கமல் உளறுகின்றனர். தமிழகத்திற்கு 58 ஆயிரம் கொரோனா தடுப்பூசி வந்ததில் 46 ஆயிரம் போடப்பட்டுள்ளது. ஒட்சிசன் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. தமிழக மருத்துவமனைகளில் ஒட்சிசன் பற்றாக்குறை இல்லை-என்றார்.

# இலவச தடுப்பூசி முகாம்கள் தமிழ்நாட்டில் மேயில் ஆரம்பம்



சென்னை, ஏப். 24

தமிழகத்தில் மே மாதம் முதலாம் திகதி முதல் இலவச தடுப்பூசி முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மே மாதம் முதலாம் திகதி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ' கொரோனா பரவலை கட்டுப்படுத்தவும், அதிகம் பாதிப்படைந்த மாவட்டங்களில், மே மாதம் முதலாம் திகதி முதல் தடுப்பூசியை வழங்குவதற்காக இலவச தடுப்பூசி முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் அனைத்து தொழிலாளர்கள், பள்ளி, கல்லூரி, ஆசிரியர்கள் என அனைவருக்கும் இலவச தடுப்பூசி வழங்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் இளங்கோவனுக்கு கொரோனா தொற்று உறுதி

சென்னை, ஏப். 24

தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சென்னை மியாட் மருத்துவமனையில் இளங்கோவன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்ட வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் அடுத்தடுத்து கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், நேற்று முன்தினம் 12 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு தமிழகத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கோவிட் கட்டுப்பாட்டு விதிகளை மீறி பிரசாரம், பொதுக்கூட்டம் என அதிக அளவில் மக்கள் ஒன்றுகூடியதன் விளைவாக தமிழகத்தில் தொற்று நோய் தீவிரமாகப்



பரவி வருகிறது.

இந்நிலையில் தேர்தலுக்கு பின்னர் பிரசாரத்தில் ஈடுபட்ட வேட்பாளர்கள், முக்கிய அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் அடுத்தடுத்து கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தி.மு.க பொதுச்செயலாளர் துரைமுருகன், தே.மு.தி.க துணைச் செயலாளர் எல்.கே. சுதீஷ், தி.மு.க. எம்.பி. கனிமொழி உட்பட தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.



# ஊரடங்குக்கு வாய்ப்பு இருக்காது!

## ஸ்டாலின் நம்பிக்கை

சென்னை, ஏப். 24

மே 2 ஆம் திகதிக்குப் பிறகு ஊரடங்குக்கு வாய்ப்பு இருக்காது என தி.மு.க., தலைவர் ஸ்டாலின் கூறி உள்ளார்.

இது தொடர்பாக தி.மு.கவினருக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில் கூறி உள்ளதாவது:

கொரோனாவின் முதல் அலை தாக்கத்தின் போது நாடு முழுவதும் ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டது. எனினும் அதனால், ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், உளவியல் சிக்கல்கள், தனிநபர் பாதிப்புகள் இவற்றில் இருந்து இன்று வரை முழுமையாக மீள முடியவில்லை. தொழில் வாய்ப்புகளை இழந்தோர், வேலையினை பறி கொடுத்தவர்கள், இப்போதும் மன உளைச்சலில் தவிக்கின்றனர். இதனால், இரண்டாவது அலை தாக்கத்தின் போது குறிப்பிட்ட அளவிலான கட்டுப்பாடுகள் மட்டுமே விதிக்கப்பட்டு உள்ளன. பொது மக்களும், தி.மு.க.,வினரும் அந்த கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

மே 2 ஆம் திகதிக்கு பிறகும் முழு ஊரடங்குக்கு வாய்ப்பு இருக்காது என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோம். அதுவரை கொரோனா பரவல் குறையும் வகையில் உரிய பாதுகாப்பு முறைகளை கையாள்வோம். நமக்கு நாளே பாதுகாப்பாக இருப்போம். நம்மை போன்றவர்களுக்கு பக்க பலமாக நிற்போம்-என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு

# பூகோள அரசியலில் அச்சுறுத்தல் ஏற்படும்

### மங்கள சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 24

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.**

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இதுகுறித்து மங்கள சமரவீர அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாக இருந்தால், கடன் நிதிநெருக்கடிகளையும் பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்படலாம்.

அதுமாத்திரமன்றி நிதி ரீதியான மோசடிகள் இடம்பெறுவதற்கான ஒரு மத்திய நிலையமான கொழும்பு மாற்றமடையும். அதற்குப் பதிலாக உண்மையிலேயே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் முதலீடுகளை இழக்க வேண்டிய நிலையேற்படும்- என்றார். (அ)

## சகல பாடசாலைகளையும் உடன் மூடுமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 24

கொவிட் -19 வைரஸ் பரவுவதால் நாட்டின் அனைத்து பாடசாலைகளையும் விரைவில் மூடுமாறு இலங்கை அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பியாசிறி பெர்னாண்டோ, தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளை மூடப்படாவிட்டால் பிரச்னை ஏற்படும் என்று சுட்டிக்காட்டினார். (அ)

## 3 பாடசாலைகளுக்கு பூட்டு

திருமலை, ஏப். 24

திருகோணமலை மாவட்டத்தில், கல்விப் பிரிவுகள் சிலவற்றில், பாடசாலைகள் மூன்று திகதி குறிக்கப்படாது மூடப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் கிரிஸ்றி லால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மஹாஓயா கல்வி வலயத்தில் குடா ஹரஸ்கல வித்தியாலத்தில் மாணவர்களில் இருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன், திருகோணமலை அபயபுரம் வித்தியாலயத்தின் அதிபருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதியானது. அதனையடுத்து அவ்விரு வித்தியாலயங்களும் மூடப்பட்டன.

சீனன்குடா தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் மற்றும் ஆசிரியை ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதியானது அதனையடுத்து அந்தப் பாடசாலையும் மூடப்பட்டது.

அந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த ஏனைய மாணவ, மாணவிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனால், மேற்படி மூன்று பாடசாலைகளையும் தற்காலிகமாக மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## கொரோனா தவிர்ப்பு நடைமுறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும்

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 24

நாட்டில் கொவிட்-19 தொற்று அதிகரித்துவரும் நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்காக இறுக்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோகண தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துச்செல்கின்றது. அதனை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் பொலிசாருக்கு நாம் பல்வேறு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றோம்.

கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படும். அத்துடன் பொதுமக்களும் அநாவசியமாக வெளியில் திரிவதையும் ஒன்றுகூடுவதையும் மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாட்டில் முடக்க நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். அவர்களது பரிந்துரைகளின் அடிப்படையிலேயே ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்னாண்டோவை விசாரணைக்கு அழைத்திருப்பதானது குற்றத்துக்கு பிரிவு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அதிகாரத்திற்குட்பட்டதே நடைபெறுகின்றது - என்றார்.

## இந்தியாவில் பரவும் கொரோனா இலங்கைக்கும் தொற்றினால் அதை எதிர்கொள்வது மிக கடினம்

### இராஜாங்க அமைச்சரின் ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

இந்தியாவில் பரவிவரும் நிலைமாற்றமடைந்த கொரோனா வைரஸ் இலங்கையில் பரவத் தொடங்கினால் அதனை எதிர் கொள்வது மிகவும் கடினமாகும். இந்நிலையில் பிரதேச எல்லைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன் நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் மூடப்படவேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் சுகாதாரத்துறை முழுமையாக சீர்குலையும் நிலையேற்படும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் ஆலோசகர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக் கும் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தொற்றுநோய்த்தடுப்பு நிபுணர்கள் ஒரு சுமுகமான நிலைமையைக் காண்பித்து, அரசாங்கம் தவறான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பேற்படுத்திக்கொடுக்கிறார்கள் என்று நான் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து கூறி வருகின்றேன்.

நீர்த்துப்போன தீர்மானங்களின் விளைவாக நாம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அலைக்கு முகங்கொடுத்தோம்.

அதேபோன்று கொரோனா வைரஸின் தன்மை நிலைமாற்றமடைவதால் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் தனிமைப்படுத்தல் மற்றும் பிராந்தியக்கட்டுப்பாடுகளை வலுப்படுத்துமாறும் இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து நானும் அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ரவி குமுதேஷ் ஆகியோரும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுமாத்திரமன்றி தடுப்பூசிகள் தொடர்பில் நீர்த்துப்போன கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி நான் சில கட்டுரைகளையும் எழுதினேன்.

அவ்வாறிருந்தும் எங்களது வேண்டுகோளையும் மீறி பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 16,000 இலிருந்து 3,000 ஆகக் குறைக் கப்பட்டது. மேலும் தமிழ், சிங்கள புதுவருடத்திற்கு சில தினங்கள் முன்னர் நான் ஊடக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இந்தியாவில் பரவிவரும் நிலை மாற்றமடைந்த வைரஸ் தொடர்பில் எச்சரித்ததுடன் அது இலங்கைக்குப் பரவினால் அதனை எதிர்கொள்வது கடினம் என்றும் கூறியிருந்தேன்.

இராணுவத்தளபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஆகியோரைத் தவிர, தொற்றுநோய்த்தடுப்புப்பிரிவின் அதிகாரிகள் இந்த அபாயத்தின் தீவிரத்தன்மையை மக்களுக்கு உணர்த்தவில்லை.

இந்நிலையில் தற்போதெனினும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் தவறாக வழிநடத்தப்படுவதிலிருந்து மக்கள் விலகிக்கொள்ள வேண்டும். தொழிற்சாலைகள் மாத்திரம் செயற்படுவதற்கு அனுமதியளிக்கும் வகையில் மேல் மற்றும் வடமேல் மாகாணங்கள் பகுதியளவில் முடக்கப்படவேண்டும்.

கடைகள், சந்தைகள் மூடப்படுவதுடன் பிராந்திய எல்லைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும். இவை முன்னெடுக்கப் படாவிட்டால், நாட் டின் சுகாதாரத்துறை முழுமையாக சீர்குலைந்துவிடும் - என்றார்.

## அநுரகுமாரவுடன் சபையில் நேற்று இந்திக அநுருத்த வார்த்தை மோதல்

கொழும்பு, ஏப். 24

பாராளுமன்றத்தில் நேற்று ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த ஆகியோருக்கு இடையில் வார்த்தை மோதல் வெடித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் ஹறின் பெர்னாண்டோவை கைது செய்ய முயற்சிப்பது குறித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் கவலை தெரிவித்ததை அடுத்து இந்த வார்த்தை மோதல் வெடித்தது.

ஆளுந்தரப்பில் உட்கார்ந்திருந்த இந்திக அநுருத்த முன் வரிசையை நோக்கி நடந்து செல்வதும், பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்கவை அச்சுறுத்தும் விதத்தில் வாக்குவாதம் செய்வதும் காணொளியில் பதிவாகியது.

அவரை தனது இருக்கைக்கு திரும்புமாறு சபாநாயகர் மஹிந்த யாப்ப அபேவர்தன பல முறை கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது.

## மன்னார் மாவட்ட கீதத்துக்கு ஆக்கங்கள் கோரல்

மன்னார் மாவட்டம் மற்றும் அதன் பல்வேறு சிறப்பம்சங்களை எடுத்துக் கூறும் வகையில் 'மாவட்ட கீதம்' உருவாக்குவதற்கு மாவட்ட கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வமுடையவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டம் மற்றும் அதன் பல்வேறு சிறப்பம் சங்களை எடுத்துக்கூறும் வகையில் 'மாவட்ட கீதம்' உருவாக்குவதற்கு மாவட்ட கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வமுடையவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

விஷேடமாக மாவட்டத்திற்கே உரியதான வரலாற்றுத் தடையங்கள் மற்றும் அதன் சிறப்பம்சங்களை எடுத்து இயம்பும் வகையிலும் மூன்று தொடக்கம் நான்கு நிமிடங்களுக்குள் இசைக்கக் கூடியதாகவும் மேற்படி கீதம் அமைதல் வேண்டும்.

எழுத்துப் பிரதியாகவோ அன்றி இசையமைத்து இறுவட்டு வடிவிலோ கீதத்தைச் சமர்ப்பிக்கமுடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு (31-05-2021) முன்னர் மாவட்டச் செயலாளர்,மாவட்டச் செயலகம்,மன்னார் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாக அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்க முடியும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டின் பின் யாழ்ப்பாணம் உட்பட பல பகுதிகளில் உப கொத்தணிகள்!

## சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 24**

**சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைத் தொடர்ந்து நாடு முழுவதும் பல பகுதிகளில் கொரோனா வைரஸ் உபகொத் தணிகள் உருவாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

குருநாகல், நரம்மல, அலவ்வ, கம்பஹா, கொழும்பு, புத்தளம், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உபகொத்தணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய இது குறித்து கருத்து தெரிவிக்கையில்-

ஆரம்பத்தில் பிலியந்தல, மகரகம, மற்றும் பமுனுவ பகுதிகளிலிருந்து உபகொத்தணிகள் பதிவாகியுள் ளன. அதைத் தொடர்ந்து, பல பகுதி களில் உபகொத்தணிகள் தோன் றின.

ஆடைத் தொழிற்சாலைகளிலிருந்தும் துணைக் கொத்தணிகள் பதிவாகியுள்ளன. பாதிக்கப்பட்ட நபர்கள் ஏற்கனவே ஒரு சில தொழிற்சாலைகளில் கண்டறியப்பட்டுள்ளனர்.

ராகமவில் உள்ள படுவத்த பகுதியைச் சேர்ந்த 12 பேரும், திவுலபிட்டியைச் சேர்ந்த 26 நபர்களும் புத்தாண்டு தொடர்பான பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்ற பின்னர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். சுகாதார அதிகாரிகள் தொடர்பு தடமறிதலை மேற்கொண்டு வருகின்றனர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நெருங்கிய கூட்டாளிகளாக அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தியுள்ளனர்.

மஹரகமவில் உள்ள பமுனுவ ஆடைச் சந்தை தொகுதியில் இரண்டு கடைகள் மூடப்பட்டன, இரண்டு ஊழியர்கள் கொரோனா வைரஸை ஒப்பந்தம் செய்திருப்பது கண்டறியப்பட்டது. அவர்களது நெருங்கிய தொடர்புகளில் கிட்டத்தட்ட 22 பேர் அடையாளம் காணப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், சுகாதார அமைச்சு இந்த வாரம் ஒரு நாளைக்கு நடத்தப்படும் பி.சி.ஆர். சோதனைகளை 15, 000 சோதனைகளாக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

நிலைமையைக் கட்டுப்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், மீண்டும் ஒரு அபாய இடமாக உருவெடுத்துள்ள கொழும்பு, புதுடில்லி போன்ற நிலைமையை எதிர்கொள்ளும் என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது ஒரு முன் எச்சரிக்கை மட்டுமே. வரவிருக்கும் மூன்று வாரங்கள் முக்கியமானதாக இருக்கும். சுகாதார வழிகாட்டுதல்களை மிக முன்னுரிமையுடன் பராமரிக்க வேண்டும். இல்லையெனில் ஒரு முக்கியமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# விடுமுறையில் வீடு சென்று திரும்பிய 26 தொழிலாளர்களுக்குக் கொரோனா

கொழும்பு, ஏப். 24

பாணந்துறையில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் புதுவருட விடுமுறைக்காக வீடு சென்று திரும்பிய 19 தொழிலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

விடுமுறைக்குச் சென்று திரும்பிய அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 26 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இதனையடுத்து எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் சுகாதார அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

# மாகாண சபை தேர்தல் நடத்தப்படாமலே இழுத்தடிக்கப்பட காரணம் இவர்கள்தான்

## முன்னாள் அமைச்சர் ஹசன் அலி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

மாகாண சபை தேர்தல் முறைமை சிறுபான்மை சமூகத்தினருக்கு மாத்திரமே தேவையானது என்ற தவறான புரிதலை உடையவர்களாலும், சாதகமான வெற்றி வாய்ப்பு வருகின்ற வரை காலத்தை கடத்த விரும்புகின்ற தரப்பினர்களாலுமே மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டைகள் போடப்பட்ட வண்ணம் உள்ளன என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார மற்றும் போஷாக்குத் துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஹசன் அலி தெரிவித்தார்.

அவரது நிந்தவூர் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஊடகவியலாளர்களை சந்தித்து மாகாண சபை தேர்தல் தொடர்பாக பேசிய போது இவர் தெரிவித்தவை வருமாறு:

மாகாண சபை தேர்தல்கள் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்கு உரிய விடயமாகவே தென்படுகின்றது. தேர்தல் முறையிலும், தொகுதி நிர்ணயத்திலும் புதிதாக மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வெவ்வேறு விதமான யோசனைகளுடன் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. ஆனால், இது இத் தேர்தலை பற்றி பிரஸ்தாபிக்கின்றபோது வேண்டும் என்றே உள்நோக்கத்துடன் கடந்த பல வருடங்களாக தொடர்ந்தேச்சையாக காலத்தை இழுத்தடிப்பு செய்வதற்கான உத்தியாகவே வெளிப்பட்டு நிற்கின்றது.

கடந்த நான்கு வருடங்களாக காகாண சபை தேர்தல்கள் கிடப்பில் போடப்பட்ட வண்ணம் உள்ளன.மாகாண சபை தேர்தல் முறைமை சிறுபான்மை சமூகத்தினருக்கு மாத்திரமே தேவையானது என்ற தவறான புரிதலை உடையவர்களாலும், சாதகமான வெற்றி வாய்ப்பு வருகின்ற வரை காலத்தை கடத்த விரும்புகின்ற தரபினர்களாலுமே மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டைகள் போடப்பட்ட வண்ணம் இருப்பது இந்த நாட்டின் சீரழிந்து போன அரசியலின் பிரதிபலிப்பு ஆகும்.

இவ்வாறான காரணங்களால் மக்களின் ஜனநாயக உரிமைகள் கேலிக்கூத்துகள் ஆக்கப்பட்டதன் விளைவுகள் அண்மையில் சர்வதேச மட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டதை நாம் கண்டோம். ஏட்டிக்கு போட்டியாக தனி மனிதர்கள், தனி கட்சிகள், தனி குடும்பங்கள், இவர்களுக்கு கூஜா தூக்குகின்ற தனி குழுமங்கள் ஆகியோருக்கு இடையிலான தான்தோன்றித்தனமான பல பரீட்சைகளுக்குள் மாகாண சபை தேர்தல் மீண்டும் மீண்டும் பிழிந்து சக்கை போடப்பட்டவாறு இருக்கின்றது.

நாம் வாழ்கின்ற நாட்டின் இறைமை, இந்நாட்டு பிரஜைகளின் உரிமை, இந்நாட்டு சமூகங்களுக்கு இடையிலான சாந்தி, சமாதானம் போன்ற உயரிய விழுமியங்களின் பெறுமானம் ஆகியவற்றை புரிந்து கொள்ளாத காட்டுமிராண்டித்தனமான அரசியல் கோலோச்சுகின்ற வரை ஒற்றுமையாக இந்நாடு பயணிக்க முடியாமல் தடுமாறி கொண்டேதான் இருக்கும். ஆனால் நிலைமைகள் சீராகின்ற வரை மாகாண சபை தேர்தல்கள் காலம் தாழ்த்தப்படுவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கவே முடியாது.

இந்நிலைமை நீடிக்குமேயானால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து தற்போதைக்கு பழைய முறையில் இவ்வருடம் மாகாண சபை தேர்தலை நடத்த ஒரு பிரேரணையை 2/3 அறுதி பெரும்பான்மையுடன் நிறைவேற்றி விட்டு அதற்கு பின்னரான தேர்தல்களில் ஆறுதலாக ஒருமித்த கருத்துடன் புதிய தேர்தல் சட்டத்தை நிறைவேற்றி தற்போதுள்ள முடிச்சுகளை அவிழ்த்து விடுவதே சிறந்த வழி ஆகும். புதிய திகுதிகள் அவற்றுக்கான எல்லை நிர்ணயங்கள் அவசர அவசரமாக செய்து முடிக்க கூடிய விடயங்களுமே அல்ல. மேலும் இழுபறிகளுக்கு மத்தியில் எந்த ஒரு பிரேரணையையும் நிறைவேற்ற துணிவது நாட்டுக்கு செய்யப்படுகின்ற துரோகமே ஆகும்.

2017 இல் புதிய தொகுதிகள் 60 இற்கு 40 என்ற கலப்பு முறையில் உருவாக்கப்பட்டபோது என நடக்கின்றது என்று புரியாமலேயே கை தூக்கி நிறைவேற்றிய சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று வரை அவர்கள் செய்த தவறை பற்றிய புரிதல் இல்லாமலேதான் நடமாடி கொண்டு இருக்கின்றனர் என்பதையும் இத்தருணத்தில் நான் சுட்டி காட்டுகின்றேன் - என்றார்.

(அ)

# தேசிய வெசாக் நிகழ்வுகள் திட்டமிட்டபடி நயினாதீவில்

யாழ்ப்பாணம், ஏப். 24

தேசிய வெசாக் நிகழ்வுகள் திட்டமிட்டவாறு நயினாதீவு நாக விகாரையில் இடம்பெறும் என யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக, யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அதன்போது ஊடகவியலாளர் , நாக விகாரையில் தேசிய வெசாக் நிகழ்வுகள் நடைபெறுமா ? என கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு பதில் அளிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய வெசாக் நிகழ்வு என்பது தேசிய நிகழ்வு. அதனை நிறுத்துவது தொடர்பில் எமக்கு எந்த அறிவுறுத்தலும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. அதனால் நிகழ்வு முன்னர் திட்டமிட்டவாறு நடைபெறும். சுகாதார விதிமுறைகளை பின்பற்றி , மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் தேசிய வெசாக் நிகழ்வுகள் நடைபெறும் என தெரிவித்தார்.

தேசிய வெசாக் நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையில் நயினாதீவு நாக விகாரையில் நடைபெறவுள்ளன. 24ஆம் திகதி சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, எதிர்வரும் மூன்று வார காலப்பகுதி எச்சரிக்கை மிக்க காலப் பகுதி எனவும் ,சுற்றுலாப் பயணங்களை தவிர்க்குமாறும் , பண்டிகை நிகழ்வுகளை நிறுத்துமாறும் இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)



# ஹரீனிடம் நலம் விசாரித்தார் சஜித்

கொழும்பு, ஏப். 24

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ளாண்டோவை, அந்தக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, நேற்றுக் காலை பார்வையிட்டு நலம் விசாரித்தார்.

அவருடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவும் சென்றிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தின தாக்குதல் தொடர்பில், சி.ஐ.டியினர் நேற்று விசாரணைக்கு அழைத்திருந்தனர். அவருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக, கொழும்பிலுள்ள நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிலியந்தலையில் புதிய கொத்தணி!

பிலியந்தலை,ஏப்.24
பிலியந்தலை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 64 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.82 பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என பிலியந்தலை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (எ)

## பாடசாலைகளை மூடும் எண்ணம் அரசுக்கு இல்லை

### கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 24
நாட்டில் கொவிட்-19 வைரஸ் தொற்று பரவல் மீண்டும் அதிகரித்துள்ள போதிலும், பாடசாலைகளை மூடுவதற்கு எதிர்பார்க்கவில்லை. கொவிட் சவாலுக்கு மத்தியில் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி கல்வி நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொவிட் அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளை மூடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா என்று கேட்டபோதே பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்ட போதுகூட பிரபல பாடசாலைகள் சிலவற்றில் ஒரு சில மாணவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டது.

எனினும் இவர்கள் பாடசாலை சூழலில் தொற்றுக்கு உள்ளாகவில்லை. அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பெற்றோருக்கு ஏற்பட்ட தொற்றின் காரணமாகவே பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதேபோன்று சில ஆசிரியர்களுக்கும் தொற்றுறுதி செய்யப்பட்டது. இதன் போது ஏனைய மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு துரிதமான செயல்பாடுகள் ஊடாக அனைத்து மாணவர்களதும் கற்றல் செயல்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டது. எனவே, தற்போதுள்ள சூழலிலும் இதே போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம்.

பெற்றோர்கள், மாணவர்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை. பாடசாலைகளில் அவசர மருத்துவ தேவைக்கான அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே, மீண்டும் பாடசாலைகளை மூடி மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை இடை நிறுத்துவதை விட சவாலுக்கு மத்தியில் அதனை முன்னெடுத்துச் செல்வதே பொருத்தமானதாக இருக்கும் -என்றார்.

## கடற்படையினரின் வாகனம் மோதி புங்குடுதீவில் மாணவி படுகாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 24
புங்குடுதீவில் கடற்படை வாகனம் மோதி, பாடசாலை மாணவியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை, 4ஆம் வட்டாரம், தம்பர் கடை சந்திப் பகுதியில் இந்த சம்பவம் நடந்தது. புங்குடுதீவு சுப்ரமணிய மகளிர் வித்தியாலய மாணவியொருவரே படுகாயமடைந்துள்ளார். அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# நாட்டில் மீண்டும் ஆபத்து நிலைமை

### கொரோனா மூன்றாவது அலை குறித்து சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே எச்சரிக்கை



**கொழும்பு, ஏப்.24**
**இலங்கையில் கொரோனா 3ஆவது அலை அச்சுறுத்தல் சூழ்ந்துள்ள நிலை காரணமாக மீண்டும் ஆபத்து நிலையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு எந்தவொரு வைபவத்துக்கும் அனுமதி வழங்காமல் இருப்பது குறித்து கருத்தில் கொள்ள உள்ளதாக அமைச்சர் கூறினார்.

கடந்த காலத்தில் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல்கள் ஓரளவு தளர்த்தப்பட்ட போதிலும் தற்போது அவ்வாறு செயற்பட முடியாது.

சுகாதார வழிகாட்டல்களை மக்கள் கடைப்பிடிக்காததால் மீண்டும் ஆபத்து நிலையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தற்போது இளம் சந்ததியினர் மத்தியிலும் இந்த வைரஸ் பரவும் ஆபத்துத் தோன்றியுள்ளது. நாட்டை முடக்குவதற்கு இதுவரை தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை-என்றார்.

## வவுனியாவில் 12 பேருக்கு தொற்று!

வவுனியா, ஏப். 24
வவுனியாவில் 12 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா கற்பகபுரம் பகுதியில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 9 பேருக்கும், சிறைச்சாலையில் ஒருவருக்கும், யாழில் இருந்து வருகை தந்த 2 பேருக்கும் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடுவதற்காக திருகோணமலையில் இருந்து வவுனியா கற்பகபுரத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு வருகை தந்த நபர் ஒருவருக்கு, திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் வருகை தந்த வவுனியா கறபகபுரம் பகுதியில் உள்ள சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தது. அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப்பெற்றன.

அதற்கமைய 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் ஒருவருக்கும், யாழில் இருந்து வருகைதந்த இருவரும் என 12 பேர் சமூகத்தில் இருந்து தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

### தீவிர சிகிச்சைப் பிரிவுகளில்

## தொற்றாளர் எண்ணிக்கை உயர்வு மிக ஆபத்தானது!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 24
தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்ட கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட திறனை மீறினால், உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைக்க முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

ஊடகங்களுடன் பேசிய சங்கத்தின் ஊடகக் குழுவின் உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பேஜ், இந்த நேரத்தில் வைரஸ் பரவுவதை நிறுத்தாவிட்டால், நாடு மீண்டும் மூடப்படவேண்டும் அல்லது கடுமையான முடிவுகள் எடுக்கப்படவேண்டியிருக்கும் என்று தெரிவித்தார்.

“தீவிர சிகிச்சை பிரிவுகளில் தற்போது 35 க்கும் மேற்பட்ட கொவிட்-19 நோயாளிகள் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

கோரோனா வைரஸின் புதிய திரிபு ஏற்பட அதிக ஆபத்து உள்ளது” என்றும் மருத்துவர் கொலம்பேஜ் சுட்டிக்காட்டினார்.

## உடன் அமுலுக்கு வரும்வகையில் மேலும் இரு பகுதிகள் தனிமை

கொழும்பு, ஏப். 24
அதிகரித்த கொரோனா தொற்று காரணமாக மேலும் இரு பகுதிகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் உத்தரவு நடைமுறைக்கு வருவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் வாரியபொல பிரதேசத்துக்குட்பட்ட நிராவிய மற்றும் நிகதலுபொத்த ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்படுவதாக இராணுவத் தளபதி கூறினார்.

குறித்த பகுதிகளில் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் இருக்கும் எனவும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

# இரசாயன உரங்கள் இறக்குமதிக்கு தடை!

கொழும்பு, ஏப். 24
இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது எதிர்காலத்தில் முற்றிலும் நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடியும். ஏரிகள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் ஏற்படும் உயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை அந்த இலாபத்தால் ஈடுசெய்ய முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“இரசாயன உரங்களின் விளைவுகள் சிறுநீரக நோய் உட்பட பல தொற்றுநோய்களுக்கு வழி வகுத்துள்ளன என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிகிச்சைக்கான செலவு மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கம் அதிகம். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தி செய்யும் குடிமகனை உருவாக்குவதற்கு, நச்சுத்தன்மையற்ற உணவுக்கான மக்களின் உரிமையை அரசு உத்தரவாதம் செய்ய வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக கரிம உரங்களைப் பயன்படுத்துமாறு நாட்டில் விவசாயத்திற்கு அறிவுறுத்தப்படும்” என்றும் ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்டார்.

உர இறக்குமதிக்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் 400 மில்லியன் டொலர்களை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படலாம். தன்னை ஆட்சியில் அமர்த்துவதன் மூலம், கொள்கையில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நாட்டிற்கான அந்த வேணாவாக்களை அடைய அனைவருக்கும் ஆதரவு தேவை” என்றும் ஜனாதிபதி கூறினார்.

## ரி.ஐ.டியால் ஒருவர் கைது

வவுனியா, ஏப். 24
வவுனியா பிரதேசத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர் உயிரிழந்த விடுதலைப் புலி அமைப்பின் உறுப்பினர்களின் பெயரில் அடையாள அட்டை மற்றும் போலியான கடவுச் சீட்டுக்களைத் தயாரித்து நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

சந்தேகநபர் தடுப்பு காவல் உத்தரவின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 13 வயதில் கைது 83இல் விடுதலை

## அமெரிக்காவின் நீண்டகாலக் கைதி இவர்

அமெரிக்காவின் நீண்ட சிறார் சிறை வாசி, அண்மையில் விடுவிக்கப்பட்டார். சுமார் 7 தசாப்தங்களைச் சிறையில் கழித்த அவர், தனது விடுதலைக்கான காத்திருப்பு குறித்தும் எதிர்கால திட்டம் குறித்தும் பிபிசியிடம் பேசினார்.

"நான் ஒருபோதும் தனியாக இருந்ததில்லை, ஆனால், நான் ஒரு தனிமை விரும்பி. என்னால் முடிந்தவரை தனியாக இருக்க விரும்புகிறேன். நான் கைது செய்யப்பட்ட காலத்திலிருந்து இப்போது விடுதலையாகும் வரை சிறையில் நான் தனியறையில் தான் இருந்தேன்."

"இது என்னைப் போன்ற தனிமை விரும்பிகளுக்கு மிகவும் உகந்தது. நான் ஒரு அறைக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்டால், வெளியில் என்ன நடக்கிறது என்பது குறித்து நான் பொருட்படுத்தியதில்லை. வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுமதிக்கப்பட்டபோது அதுதான் சிறந்த துணை." வைத்திருங்கள் - அது எனது நிறுவனம். சிறை வாழ்க்கை ஒரு வகையில், ஜோ லிகானுக்குப் பொருத்தமாக இருந்தது என்று கூடச் சொல்லலாம்,.

இது எதிலும் தலையிடாமல், வாய் மூடி மௌனியாய், எந்த சிக்கலிலும் சிக்காமல் இருக்க உதவியதாகக் கூறுகிறார். இது 68 ஆண்டு சிறை வாழ்க்கையில் தான் கற்றுக்கொண்ட பாடம் என்று அவர் தெரிவிக்கிறார். நாளின் இறுதியில், தனது அறைக்கு வந்து ஒய்வெடுக்கும் நேரத்தில், அந்த அறையில் தான் தனியாக இருக்க வேண்டியது குறித்து அவர் கவலை கொள்ளவில்லை.

உண்மையில் தனக்குத் தானே துணை என்பது அவருக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாக இருந்தது. உள்ளே எனக்கு நண்பர்கள் இல்லை. வெளியிலும் எனக்கு நண்பர்கள் இல்லை. நான் பழகிய அனைவரையும் நான் நட்புடன் தான் நடத்தினேன். மிகவும் இணக்கமாகவே இருந்தோம். என்று அவர் கூறுகிறார்.

ஆனால், நண்பர் என்ற சொல்லை நான் பயன்படுத்தவில்லை. என்னைப் போன்ற ஒருவருக்கு அது மிகவும் பொருள் பொதிந்த சொல்லாடல் அது. நீ நண்பனானால், மிகப் பெரிய தவறு செய்தவனாவாய் என்று பலர் என்னிடம் கூறியுள்ளனர்.

லிகான், விருப்பப்பட்டே தனியாக இருந்துள்ளார். அலபாமாவின் பர்மிங்காமில் தனது தாய்வழி தாத்தா பாட்டியிடம், கிராமப்புறச் சூழலில் வளர்ந்த அவருக்கு நிறைய நண்பர்கள் இல்லை. ஆனால், தனது குடும்பத்தினருடன் கழித்த இனிமையான பொழுதுகளை அசை போடுகிறார்.

உதாரணமாக, ஞாயிற்றுக்கிழமைகளில் அவருடைய இன்னொரு தாத்தா உள்ளூர் தேவாலயத்தில் பிரசங்கம் செய்வதை நினைவு கூருகிறார். செவிலியராகப் பணி புரிந்த தனது தாயாருடனும் மெக்கானிக்காக இருந்த தந்தையுடனும் தனது தம்பி, தங்கையுடனும் தெற்கு பிலடெல்பியாவிலிருந்து ஒரு தொழிலாளர் குடியிருப்புப் பகுதிக்குக் குடிபெயர்ந்தபோது அவருக்கு வயது 13.

அவர் பள்ளிக் கல்வி பெறப் போராடினார். படிக்கவோ எழுதவோ அவரால் முடியவில்லை. விளையாட்டிலும் ஆர்வமில்லை. நண்பர்களும் அமையவில்லை. நான் அதிகமாக வெளியில் சுற்றும் நபர் இல்லை. ஒன்றிரண்டு நண்பர்கள் தான் எனக்கு.

எனக்கு அதிகக் கூட்டத்தில் நாட்டமும் இல்லை. 1953ஆம் ஆண்டில், ஒரு வெள்ளிக்கிழமை மாலையில் அந்தச் சம்பவம் நடந்தது. அவருக்கு நெருக்கமில்லாத ஒரு சிலருடன் அவர் தெருவில் சென்று கொண்டிருக்க, அவர்கள் மது அருந்தியிருந்த சிலர் மீது மோதிவிட, அங்கு தொடங்கியது சிக்கல். மது அருந்தப் பணம் கேட்ட விவகாரம் பெரிதாகியது. அவர் பின்வாங்குகிறார்.

ஆனால், அவர் ஒப்புக்கொண்ட உண்மை என்னவென்றால், அன்றிரவு ஏற்பட்ட கத்தித் குத்துச் சம்பவத்திலும் தொடர்ந்த வன்முறையிலும் இருவர் உயிரிழந்ததாகவும் ஆறு பேர் காயமடைந்ததாகவும் அதில் தனக்கும் சம்பந்தமிருந்ததாகவும் அவர் ஒப்புக் கொள்கிறார்.

முதலில் கைது செய்யப்பட்டது லிகான் தான். காவல் நிலையத்தில் அவர் அன்றிரவு யாருடன் இருந்தார் என்பதை உண்மையாகவே அவரால் அடையாளம் காட்ட இயலவில்லை.

எனக்குப் பரிச்சயமான இருவரின் நிஜ பெயர் கூட எனக்குத் தெரியாது, அவர்களது மற்ற இரண்டு அழைக்கும் பெயர்கள் தான் எனக்குத் தெரியும். ராட்மேன் தெருவில் உள்ள தனது வீட்டிலிருந்து தொலைவிலுள்ள ஒரு காவல் நிலையத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

சட்ட உதவி மறுக்கப்பட்டு, ஐந்து நாட்கள் அங்கு காவலில் வைக்கப்பட்டார். தன்னைப் பார்க்க வந்த தனது பெற்றோர் திருப்பியனுப்பப்பட்டது குறித்துத் தனக்குக் கோபம் இருந்ததாக அவர் கூறுகிறார்.அந்த வாரத்திலேயே, அப்போது 15 வயதே ஆன அந்தச் சிறுவன், கொலைக்குற்றம் சாட்டப்பட்டான்.

அதை தொடர்ந்து மறுத்து வந்த அந்தச் சிறுவன், அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனமான PBS -க்கு அளித்த பேட்டியில், தான் இருவரைக் கத்தியால் குத்தியதாகவும் அவர்கள் உயிருடன் இருப்பதாகவும் எனினும் தனது செயலுக்காகத் வருந்துவதாக தெரிவித்தான்.

என் மீது கொலைக்குற்றம் சாட்டப்படும் அறிக்கைகளைக் காவல் துறை வெளியிடத் தொடங்கியது. நான் யாரையும் கொலை செய்யவில்லை, என்பது அவரது வாதமாக இருந்தது.

ஆயுள் தண்டனைக் கைதிகளுக்குப் பரோல் வசதி மறுக்கப்படும் ஆறு அமெரிக்க மாகாணங்களில் ஒன்று பென்சில்வேனியா.

குற்றவியல் விசாரணையை லிகான் எதிர்கொண்டார், அங்கு அவர் வழக்கின் உண்மைகளை ஒப்புக் கொண்டார், கொடூரமான இரண்டு கொலைகளைச் செய்ததாக அவர் மீது குற்றம் உறுதிப் படுத்தப்பட்டது. பரோல் இல்லாத கட்டாய ஆயுள் தண்டனை அந்தச் சிறுவனுக்கு வழங்கப்பட்ட போது நீதிமன்றத்தில் அவன் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது முன்னறிவிக்கப்பட்ட முடிவு என்பதால், இது வழக்கமான நடைமுறை தான். ஆனால் தனது தண்டனையின் முழு விவரங்களையும் அறியாமலேயே சிறைக்குச் சென்றான் அந்தச் சிறுவன்.

யாரிடமும் கேட்க வேண்டும் என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. என்ன கேட்பது என்று கூட எனக்குத் தெரியவில்லை. நம்புவது கடினம் தான், ஆனால் அது தான் உண்மை என்று லிகான் கூறுகிறார். நான் சிறை செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும், ஆனால் என் வாழ்நாள் முழுவதும் நான் சிறையில் இருப்பேன் என்று நான் நினைக்கவில்லை.

பரோலுடன் கூடிய ஆயுள் தண்டனை என்பதை நான் கேள்விப்பட்டதில்லை. "நான் ஒரு குழந்தையாக இருந்தபோது எவ்வளவு குழப்பங்களைச் சந்தித்தேன் என்று சொல்கிறேன். என்னால் படிக்கவோ எழுதவோ முடியவில்லை, என் பெயரைக் கூட உச்சரிக்க முடியவில்லை.

என் பெயர் ஜோ என்று எனக்குத் தெரியும், ஏனென்றால் எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து அப்படித் தான் இதுவரை குறிப்பிடப்பட்டேன் சிறைச் சாலைக்குள் சென்ற போது பயந்ததை விட குழப்பம் தான் எனக்கு அதிகம் இருந்தது என்று லிகான் கூறுகிறார்.

அவரது மனதில் இருந்த முக்கிய விடயம் அவரது குடும்பம் - அவர்களிடமிருந்து விலகி இருப்பது என்பது தான். அது தான் யோசிக்க வைத்த ஒரே விஷயம் என்று அவர் குறிப்பிடுகிறார். யுநு 4126 என்ற எண் கொண்ட கைதியாகச் சென்ற லிகான் தனது தண்டனைக் காலம் எவ்வளவு என்று ஒருபோதும் கேள்வி எழுப்பவில்லை.

68 ஆண்டுகளில் ஆறு சிறைகளில் வாழ்ந்த அவர், ஒவ்வொரு முறையும் சிறை வாழ்க்கையின் வழக்கத்திற்குப் பழகிக்கொண்டார். 6 மணிக்கு புல் ஹார்ன் மூலம் எழுப்பி, எண்ணிக்கைக்கு எழுந்து நிற்கவும், இது எண்ணிக்கை நேரம், 7 மணி உணவு நேரம், 8 மணி நேரம் வேலை நேரம், என்று கூறுவார்கள்.

இவர் சில காலம் சமையல் மற்றும் சலவைப்பணியில் ஈடுபட்ட லிகான், பெரும்பாலும் ஒரு துப்புரவுப் பணியை செய்தார்.

மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் தனது பணிக்குத் திரும்ப வேண்டும். மாலையில் மீண்டும் ஒரு ரோல் அழைப்பு மற்றும் இரவு உணவு அவரது நாளை நிறைவு செய்தன. சிறை வாழ்க்கை பெரும்பாலும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது.

வெளி உலகம் தான் நம்பமுடியாத மாற்றத்தை அடைந்து விட்டது. சிறையில் தனது நன்னடத்தை குறித்துப் பெருமை கொள்ளும் லிகான், நான் போதை மருந்து எடுத்துக்கொண்டதில்லை, மது அருந்தியதில்லை, உயிரைக் கொல்லும் எந்தத் தவறையும் நான் செய்ததில்லை.

தப்ப முயன்றதில்லை, யாருக்கும் துன்பம் கொடுத்ததில்லை என்று நினைவு கூர்கிறார். நான் என்னால் முடிந்த வரை பணிவாகவே இருந்தேன். சிறை எனக்குக் கற்றுக்கொடுத்த பாடத்தில் முக்கியமானவை, உன் வேலையை மட்டும் பார், சரியானதை மட்டும் செய், முடிந்த வரை சிக்கல்களிலிருந்து விலகி இரு' ஆகியவை தான்.

சுமார் 53 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த நிலையில், ஒரு வழக்கறிஞர் லிகானைப் பார்க்க விரும்புவதாக அவரிடம் கூறப்பட்டது.

சிறார்களை தூக்கிலிட முடியாது என்று 2005இல் அமெரிக்க உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பால் உற்சாகமடைந்தார். பிராட்லி எஸ் பிரிட்ஜ். அடுத்த பெரிய சட்டப் பிரச்னையாக அவர் கருதிய, பரோல் இல்லாமல் ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட சிறார்கள் குறித்த விடயத்தை கையிலெடுத்தார்.

அந்த நேரத்தில், பென்சில்வேனியாவில் இதுபோன்ற சூழ்நிலைகளில் 525 கைதிகள் இருந்தனர், இது அமெரிக்காவிலேயே மிக அதிகமானது என்று பிரிட்ஜ் கூறுகிறார். பிலடெல்பியாவில் 325 பேர் இருந்தனர். அதிலும் மீக நீண்ட காலம் சிறையில் இருந்தவர் லிகான்.

உதவி பாதுகாவலர் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்தார். பிலடெல்பியாவின் டிபென்டர் அசோசியேஷனைச் சேர்ந்த பிரிட்ஜ் கூறுகையில், அவர் தனது தண்டனையைப் பற்றிக் கூட அறிந்திருக்கவில்லை. நான் அவரைச் சந்திக்கும் வரை அவருக்கு இது பற்றி எதுவும் தெரியாது, என்று அவர் கூறினார்.

ஆனால், அவர் ஒருபோதும் நம்பிக்கையை கைவிடவில்லை என்பது தான் சுவாரஸ்யமான விஷயம். ஆரம்பத்திலிருந்தே ஏதாவது நடக்கும் என்ற நம்பிக்கையுடனே அவர் இருந்தார். என்கிறார்.

இது எப்படி நடக்கும் என்று அவர் நினைத்தார் என்பது எனக்கு தெளிவாகத் தெரியவில்லை. இது பற்றி அவர் சிந்தித்திருப்பார் என்று கூட நான் நினைக்கவில்லை. தன்னை நிரூபிப்பதற்கு என்ன வழி என்றெல்லாம் அவருக்குத் தெரியாது , ஆனால் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. எல்லாம் சரியாக நடக்கும் என்று நம்பி, அதற்காகப் பொறுமையாகக் காத்திருக்க அவர் தயாராக இருந்தார்.

இந்தச் சந்திப்பு தான் லிகானின் கண்களைத் திறந்தது. அவரது தண்டனையைச் சட்டபூர்வமாக மேல்முறையீடு செய்த மனுவின் நகலை பிரிட்ஜ் அவருக்குக் காட்டியபோது தான் லிகான் தனது சிறைவாசத்தின் விதிமுறைகளை முதல்முறையாக அறிந்து கொண்டார்.

(மறு பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட சுயாதீனப் பொறிமுறை என்ன?

## விளக்குகின்றார் ஜஸ்மின் சூகா

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையில் **46** ஆவது அமர்வில் **23** மார்ச் **2021** அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்த சுயாதீனப் பொறிமுறை இலங்கையில் பாரிய குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலின் ஆரம்பத்தை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தை குறிப்பதாக தென்னாபிரிக்காவை தலைமையகமாகக் கொண்ட ஜஸ்மின் சூகா தலைமையிலான உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த பொறிமுறையினை உருவாக்கும் செயல்முறையும் அத்துடன் அதனை ஆரம்பித்தலும் முக்கியமாக உள்ள அதேவேளையில் அது கணிசமான சிக்கல்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பது முக்கியமானதாகும் எனவும் உண்மைக் கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் கூறியுள்ளது.

சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன இந்தப் பொறிமுறை எவ்வாறு இயங்கும் என்பது பற்றி தெளிவாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாக உள்ளதாகக் குறிப்பிட்டு அது குறித்த விளக்கக் குறிப்பை உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் அறிவிக்கப்பட்ட இலங்கைக்கான சுயாதீனப் பொறிமுறை பற்றி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான ஒரு சுருக்கமான விளக்கக் குறிப்பு இதுவாகும்.

**46** ஆவது அமர்வில் **23** மார்ச் **2021** அன்று மனித உரிமைகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட A/HRC/46/L.1/Rev.1 தீர்மானத்தில் இந்த சுயாதீனப் பொறிமுறை இடம்பெற்றுள்ளது. இந்தத் தீர்மானத்தில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

கடந்த கால குற்றங்களுக்கான நீதியைத் தேடும் பல்வேறு வகையான பொறுப்பு நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளரால் பெப்ரவரி **2021** இல் மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் இருந்து இது உருவாக்கப்பட்டது.

**விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான முதன்மைப் பொறுப்பு**

இலங்கை அரசானது கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்களை உள்நாட்டில் விசாரித்து வழக்குத் தொடர்வதற்கான முதன்மையான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற அதேவேளையில் அதனைச் செய்யத் தவறிவிட்டது என்பதனை **2021** தீர்மானம் ஏற்றுக் கொள்கிறது.

இலங்கையானது இதனைச் செய்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்காமையே சர்வதேச சமூகமானது பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை கையிலெடுத்திருப்பதற்கான முக்கிய காரணமாகும். பொறுப்புக்கூறல் மற்றும் இடைக்கால நீதிக்கான உள்நாட்டு செயன்முறைகள் தோல்வியடைந்திருப்பதை இந்த தீர்மானம் அங்கீகரிப்பதாக உள்ளது.

**ஒரு சுயாதீனப் பொறிமுறையை கொண்டிருப்பதற்கான முக்கியத்துவம் என்ன?**

i. ஒரு விரிவான கருத்தை உருவாக்குதல்

நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான ஒரு சர்வதேசக் குற்ற வழக்கினை உருவாக்குவதற்கு அடிக்கடி பரவலான அல்லது திட்டமிட்ட தாக்கதல்களுடன் தொடர்புபட்ட விரிவான கட்டமைப்பின் ஒரு பகுதியாக புரியப்பட்ட சிக்கலான குற்றங்கள் பற்றிய ஒரு ஆய்வு அவசியமானதாகும்.

வழமையாக தனிப்பட்ட நபர்களின் குற்றவியல் பொறுப்பினை நிரூபிப்பதற்கு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் இடத்தில் நடத்தை வடிவங்கள் பற்றிய மதிப்பீடும் அத்துடன் சிக்கலான வலையமைப்புகளில் முறையான மற்றும் முறைசாராத உறவுகளின் மதிப்பீடும் அவசியமாகிறது.

பல சமூக அமைப்புக்கள் ஒரு குறிப்பிட்ட புவியியல் அல்லது ஆய்வுப் பகுதி சார்ந்த நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் அதேவேளையில் ஒரு பூரணமான வழக்குகோவையை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களையும் கொண்டிருப்பது சாத்தியமில்லை.

இலங்கைக்கான சுயாதீனப் பொறிமுறையின் முக்கியமான நன்மைகளில் ஒன்று என்னவெனில் அது நாட்டுக்கு உள்ளேயும் வெளியும் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் ஆதாரங்களை சேகரிக்க கூடியதாக இருப்பதுடன், தனிப்பட்ட நபரின் பொறுப்பு தொடர்புபட்ட மற்றும் மிகவும் மோசமான குற்றங்கள் பற்றிய ஒரு விரிவான கருத்தை உருவாக்க கூடியதாகவும் இருக்கும்.

குறிப்பிட்ட சிவில் சமூக அமைப்புக்களால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏனையவர்களால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களுடன் சேர்க்கும் போது அவை பொருத்தமானவையாக இருக்கலாம். ஆதாரங்களைச் சோதித்துப் பார்க்கும் திறனானது சுயாதீன பொறிமுறைதான் சேகரிக்கின்ற ஆதாரங்கள் பற்றிய நம்பகத்தன்மையை உறுதிசெய்து கொள்வதற்கு அதற்கு உதவும்.

ii. ஆதாரங்களை சேமித்துவைத்தல்




இந்த சுயாதீனப் பொறிமுறையானது ஆதாரங்களை பாதுகாப்பான முறையில் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான சேமிப்பு மற்றும் முகாமைத்துவ முறையை வழங்ககூயதாக இருக்கும்.

iii. பகுப்பாய்வு

இந்த சுயாதீனப் பொறிமுறையானது ஒரு டிஜிற்றல் ஆதார முகாமைத்துவ முறையையும், பெரும் எண்ணிக்கையான தரவுகளை ஒழுங்குபடுத்தி , பரிசோதித்துப் பார்த்து பகுப்பாய்வு செய்யும் சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்களையும் பயன்படுத்தி நிபுணர் பகுப்பாய்வினை மேற்கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்.

சிவில் சமூக அமைப்புக்களின் தொழிநுட்ப ஆற்றலைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும் அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக் கூடியாகவும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புக்களுடன் உறவினைக் கட்டியெழுப்புதல் இந்தப் பொறிமுறையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருக்கும்.

**சர்வதேச கவனத்தைப் பேணுதல்**

இந்த சர்வதேசப் பொறிமுறையானது அடுத்த **12** மாதகாலப் பகுதியில் ஒழுங்கானமுறையில் மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வகையில் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்ந்தும் இருக்கும். •

---

நான் கைது செய்யப்பட்ட காலத்திலிருந்தே நான் தவறாக நடத்தப்படுவதை உணர்ந்தேன். பரோல் இல்லாமல் சிறார்களுக்கு ஆயுள் தண்டனை வழங்குவது, அரசியலமைப்பிற்கு விரோதமானது என்பதை அறிந்தேன்.தான் ஒரு நாள் சிறைச்சாலையிலிருந்து உண்மையிலேயே வெளியேறக்கூடும் என்ற நம்பிக்கையின் முதல் கீற்று அன்றுதான் அவருக்குத் தோன்றியது.

அடுத்த **15** ஆண்டுகளில் அவர் எடுத்த சில முடிவுகளை யாரும் புரிந்து கொள்வது சற்று சிரமம் தான். விடுதலையாக அவருக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகளை நிராகரித்தார். அது வாழ்நாள் முழுவதும் அவருடன் தொடர்ந்து வரும் ஒரு இழிவாகவே அவர் கருதினார்.

பரோல் வாரியம் என்னை இரண்டு முறை வந்து சந்தித்தது. பரோலை ஏற்றுக்கொள்வது பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விரைவான வழியாக இருந்திருக்கும், என்று அவர் கூறுகிறார்.

ஆனால் நான் ஒப்புக்கொண்டிருந்தால், நான் என் வாழ்நாள் முழுவதும் கண்காணிப்பில் இருந்திருப்பேன். என் வழக்கு வாழ்நாள் பரோலுக்கு அனுமதி அளிக்கவில்லை. அப்படி அனுமதி இருந்திருந்தால் சிக்கல் இல்லை.அதனால் தான் நான் ஒப்புக்கொள்ளவில்லை.

**2016** ஆம் ஆண்டில், அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனைத்து சிறார் ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கும் தண்டனை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அடுத்த ஆண்டு, லிகானின் தண்டனைக் காலம் **35** ஆண்டுகளாக மாற்றிய மைக்கப்பட்டது


அதாவது அவர் முடித்திருந்த தண்டனைக் காலம் அவரை பரோலுக்கு விண்ணப்பிக்க அனுமதித்தது.

பிரிட்ஜ் அவரை வற்புறுத்தினார், ஆனால் லிகான் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். "உடனிருந்தவர்கள், நிர்வாகத்தினர் மத்தியில் இது பெரும் சர்ச்சையானது. நான் ஏன் பரோலை ஏற்கவில்லை என்பது பேசுபொருளானது.

வேறு வழி இருக்கும் போது இதை ஏன் ஏற்க வேண்டும்? நான் எந்தத் தீய நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. எனினும் நான் பரோலை ஏற்றிருந்தால், நான் கண்ணியமாக நடத்தப்பட்டிருக்கமாட்டேன்.

நான் சுதந்தரமாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே நான் விரும்பியது. நான் இந்த வார்த்தைகளை மட்டுமே பயன் படுத்துகிறேன்: நான் சுதந்திரமாக இருக்க விரும்பினேன். எனவே, பிரிட்ஜ் **2017** தீர்ப்பை மேல் முறையீடு செய்ய வேண்டியிருந்தது, இறுதியில் இந்த வழக்கை கூட்டாட்சி நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்.

அங்கு **2020** நவம்பரில் நீதிபதி அவருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார்.



பெப்ரவரி **11** அன்று லிகானை அழைத்துச் செல்ல பிரிட்ஜ் மாண்ட்கோமெரி கவுண்டிக்குச் சென்றபோது, அந்த முன்னாள் கைதி மிகவும் அமைதியாக இருப்பதைக் கண்டார்.

ஒரு பெரிய ஆர்ப்பாட்டமோ ஆரவாரமோ இல்லை. இத்தனை ஆண்டுகளாக இருந்தது போலவே தனது எண்ணங்களைத் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டு அமைதியாக இருந்தார். அவர் விடுவிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, அவர் அந்த ஸ்டேட் கரெக்‌ஷனல் இன்ஸ்டிட்யூஷன் பீனிக்ஸில் இருந்து வெளியேறிய அந்த தருணத்தைப் பிரதிபலிக்கிறார்.

நான் மறுபடி பிறந்தது போல உணர்ந்தேன். எல்லாமே எனக்குப் புதிதாக இருந்தது. இன்னும் எனக்கு எல்லாமே புதிதாகத் தான் தோன்றுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் நான் தெருவில் பார்த்த கார்கள் போல இப்போது உள்ள இல்லை. இப்போது என்னைச் சுற்றியுள்ள உயரமான கட்டடங்கள் எதுவும் அப்போது இருக்கவில்லை, என்கிறார் அவர்.

தனது அறையைச் சுட்டிக்காட்டி, இது எல்லாமே எனக்குப் புதிதாகத் தான் இருக்கிறது. நான் இவற்றுக்குப் பழகிக் கொண்டிருக்கிறேன். இது எனக்குப் பிடித்திருக்கிறது. இது உண்மையான சவால் கடந்த **68** ஆண்டுகள் லிகானுக்கு மிகுந்த இழப்பைத் தந்திருக்கின்றன. பரோல் இல்லாமல் விடுதலைக்காகக் காத்திருப்பதன் மூலம் அவர் மேலும் நேரத்தை இழந்துவிட்டார் என்பது அவருக்குத் தெரியும் - அந்த நேரத்தை அவர் தனது குடும்பத்தினருடன் செலவழித்திருக்கலாம்.

இப்போது அவர்களில் பலர் இறந்து விட்டனர். நான் சிறையில் இருந்தபோது என் சகோதரரின் மகள் வலேரி பிறந்தார், நான் சிறையில் இருந்தபோது அவளுடைய மூத்த சகோதரி பிறந்தாள், நான் சிறையில் இருந்தபோது அவளுடைய சிறிய தங்கை பிறந்தாள், என்று அவர் நினைவு கூர்கிறார்.

நெருங்கிய உறவினர்கள் அனைவரும் இறந்து விட்டனர். இப்போது, நான், ஜவலேரிஸ மற்றும் வலேரியின் தாயார் மட்டுமே இருக்கிறோம்.

**83** வயதான இவர், இவ்வளவு காலம் காத்திருந்த வாழ்க்கைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள முயற்சித்து வருகிறார். இவருக்கு எதிர்காலம் குறித்தும் சில திட்டங்கள் உள்ளன.

தனக்கு நன்றாகத் தெரிந்ததைச் செய்ய விரும்புகிறார். "நான் என் வாழ்நாள் முழுவதையும் செய்து வந்ததைத் தான் செய்யப்போகிறேன். துப்புரவு பணியை எனக்குக் கொடுங்கள். என்கிறார் இவர். நன்றி-பி.பி.சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி** 48

02A. வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படல்.


2019 38




800 ml A யில் இருந்து 200 அட எடுத்து C ற்கு சேர்க்கும் போது A ஆனது
600 ml ஆகும். C ஆனது 600 ml ஆகும்.ஏற்கனவே B ஆனது
600 ml ஆகும்.

மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவுகளைச் சமப்படுத்துவதற்குப் பின்பற்றத்தக்க விரைவானதும் இலகுவானதுமான நடைமுறை யாதெனில்
1. பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகளைச் சமப்படுத்தல
எனவே சரியான விடை 1

2020 38




A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை
அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவானது, பாத்திரம் B இல் உள்ள அரிசியின் அளவிலும சமமாக இருக்கும் காரணம் A ஆனது 4 பங்கு B ஆனது 2 பங்கு A இனது
அரைவாசி 2 பங்கு B இனது அரைவாசி 1 பங்கு . இரண்டினையும் சேர்த்தால்
மொத்தம் 3 பங்கு. A யில் எஞ்சியிருப்பது 2பங்கு B யில் எஞ்சியிருப்பது 1 பங்கு. இரண்டினையும் சேர்த்தால் மொத்தம் 3 பங்கு. எனவே சரியான விடை 2

**பயிற்சி**

01. மைதானமொன்றில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் தொடர்ச்சியாக கொடிகள் நடப்பட்டிருந்தன எனின், அம்மைதானத்தில் 42வதாக நடப்பட்டிருந்த கொடியின் நிறம் மஞ்சள் ஆக இருக்கும்.காரணம் 1 இலிருந்து 3ம் இடத்தில் மஞ்சள் வரும். 42 யினை 3யினால் வகுத்தால் 12 வரும் . எனின் 42 வது மஞ்சள் ஆகும். எனவே சரியான விடை 3
02. ஒரு பண்ணையிலுள்ள ஓர் ஆட்டிற்கு 3 கால்கள் உள்ளன. அப் பண்ணையில் மொத்தமாக 11 ஆடுகள் உள்ளன எனின், அங்குள்ள ஆடுகளின் கால்களின் எண்ணிக்கை 43. காரணம் ஒரு ஆட்டிற்கு 4 கால்கள் என்ற வகையில் 11x4=44 ஆனால் நொண்டி ஆட்டிற்கு 3 கால் எனின் 43 கால்கள். எனவே சரியான விடை 3
03. தரம் 05 இல் கற்கும் எனது தங்கையின் வயது 10 ஆகும். எனது வயது 12 ஆகும் நான் எனது 16 வயதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் போது 4 வருடங்களாகும் போ்து தரம் 05 இல் கற்கும் எனது தங்கையின் வயது 15 தரம் 5+4= தரம் 9

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி யாழ். பல்கலையில் மீளத் திறப்பு

**யாழ்ப்பாணம்,ஏப்.24**

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உடைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு நேற்றுக்காலை மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.**





*யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டது.*

*இதனையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டதோடு பல்கலைக்கழக மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.*

*மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு முன்வந்த பல்கலை. நிர்வாகம், கடந்த ஜனவரி 11 ஆம் திகதி காலை துணைவேந்தரால் அடிக்கல் நாட்டப்பட்டது.*

*இந்நிலையில், நினைவுத்தூபி கட்டுமானம் நிறைவுக்கு வந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் அதே இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. (எ)*

# சஹ்ரானின் மாமா உட்பட மூவர் கைது!

*கொழும்பு,ஏப்.24*

*உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான குண்டுதாரி சஹ்ரான் ஹாசிமின் மாமனார் உட்பட மூவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.*

*குளியாப்பிட்டி - கெகுனகொல்ல பிரதேசத்தில் வைத்து இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.*

*சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட அடிப்படைவாத வகுப்புக்களில் கலந்துகொண்ட குற்றச்சாட்டில் இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.*

*இந்நிலையில், இந்த சந்தேக நபர்கள் மூவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது- என்றார். (எ)*

# மலையக விவசாயிகளை பழிவாங்கல் அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை



*கொழும்பு,ஏப்.24*

*கிழங்கு அறுவடை இடம் பெறும் காலத்தில் அரசாங்கம் கிழங்கு இறக்குமதி செய்திருக்கின்றது. இது கம்பனிகளுடன் அரசாங்கம் இணைந்து மலையக விவசாயிகளைப் பழிவாங்கும் செயலாகும். இதனை அரசாங்கம் உடன் நிறுத்தவேண்டும். அத்துடன், நீதிமன்ற அதிகாரங்களை ஆணைக்குழு அமைத்து பாராளுமன்றத்துக்கு எடுத்துக்கொள்வது சட்டத்துக்கு முரணாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2015 முதல் 2019 நவம்பர் மாதம் 19ஆம் திகதி வரையான காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.*

*அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:*

*1977 இல் இருந்து இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மூலம் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பழிவாங்கலில் அரச அதிகாரிகள், இலங்கை போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள், சதொச நிறுவன அதிகாரிகளே தொடர்ந்து பழிவாங்கப்படுகின்றனர்.*

*அந்த வகையில் தற்போது அரசாங்கம் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதாக ஆணைக்குழு அமைத்து அதில் தேவையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதை நாங்கள் காண்கின்றோம்.*

*ஏனெனில், யாருக்காவது அநீதி ஏற்பட்டிருந்தால் அதுதொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் நாட்டில் இருக்கும் நீதிமன்றத்துக்கே இருக்கின்றது.*

*அந்த அதிகாரத்தை பாராளுமன்றத்துக்குப் பெற்றுக்கொண்டு, ஆணைக்குழு அமைத்து நடவடிக்கை எடுப்பது சட்டத்துக்கு முரணானதாகும். குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டாலும் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக்கூடாது என்பதே உலகளாவிய நியதியாகும்.*

*அவ்வாறு இருக்கும் போது ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொள்வது அரசியல் பழிவாங்கலுக்கு காரணமாகின்றது. அது நல்லதாக அமையாது.*

*அந்த வகையில் அரசாங்கம் கம்பனிகளுடன்இணைந்துகொண்டு மலையக தோட்ட மக்களைப் பழிவாங்கவேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம்- என்றார். (எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘போர்ட் சிற்றி’ சட்ட மூலம் மிகவும் பாரதூரமானது

## சிக்கலை தீர்க்குமாறு அரசாங்கத்துக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் ஆலோசனை



கொழும்பு,ஏப்.24

**கொழும்பு துறைமுக நகர ‘போர்ட் சிற்றி’ பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் முத்துறை அதிகாரங்களையும், சுயாதீனத்தன்மையையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இது மிகவும் பாரதூரமானது.இவ்விடயம் குறித்து அரசாங்கம் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் சிவில் அமைப்புக்களுடனும் பேச்சு நடத்துவது மேற்கொள்வது அவசியமாகும் என்று முன்னாள் பிரதமர், ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில்விக்கிர மசிங்க தெரிவித்தார்.**

முத்துறை அதிகாரங்களையும், நாட்டின் சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகர விவகார பிரச்னைக்கு அரசியல் மட்டத்தில் தீர்வுகாண முடியும் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் விஷேட அறிக்கை ஒன்றை விடுத்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கொழும்பில் நிதி மத்திய நிலையத்தை உருவாக்கும் யோசனையை 2016 ஆம் ஆண்டு அமைச்சரவையில் முன்வைத்தேன்.

இதற்கமைய நிதி மத்திய நிலையத்தை கொழும்பு துறைமுக நகரில் ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அந்த நிதி மத்திய நிலையத்துக்கான சட்டம் உருவாக்கப் பட்டது. ஏனெனில், அது பொருளாதாரத்தின் ஒரு பகுதி.

இலங்கைக்கு சொந்தமான பகுதி ஆகையால் அதற்கான நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்பட்டது.

கொழும்பு துறைமுக நகரின் அபிவிருத்தி நிர்மாண பணிகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஒப்பந்தகார சீன நிறுவனத்துக்கு உண்டு.

அதனையும் நாங்கள் பாதுகாத்துள்ளோம். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பேச்சுவார்த்தையின் ஊடாக சட்ட வரைவு உருவாக்கப்பட்டது. காலத்துக்குத் தேவையான சட்டங்களும் அடிக்கடி உருவாக்கப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர விவகாரம் தொடர்பில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் முத்துறைகளின் அதிகாரங்களையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாத்தது.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டமூலம் பாரதூரமானது- என்றார். (எ)



# கொழும்பின் சில பகுதிகளில் நேற்று கடும் வாகன நெரிசல்

கொழும்பு,ஏப்.24

கொழும்பின் சில பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பத்தரமுல்லை, இராஜகிரிய மற்றும் ஆமர் வீதி ஆகிய பிரதேசங்களில் நேற்றுக்காலை கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் பெய்து வரும் கடும் மழையால் இவ்வாறு வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், தென், மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்றுக் காலை மேல் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை வீழ்ச்சி பதிவானதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (எ)

# இராணுவத்துக்கு எதிரான வழக்கு நேற்று தள்ளுபடி

ஹற்றன்,ஏப்.24

பொதுமக்களின் நிலங்களை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றி பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டதாகக் குற்றம்சுமத்தி இராணுவத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஹற்றன் நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

ஹற்றன், கொட்டகலை பகுதியில் 581 ஆவது படைப் பிரிவு நிறுவப்பட்டபோது, இராணுவம் பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்களை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றி, அப்பகுதியில் அமைதிக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம்சுமத்தி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இரு தரப்பினரின் சமர்ப்பணங்களைப் பரிசீலித்த பின்னர், இந்த வழக்கின் பிரதிவாதி இராணுவம் என்றும், அரச பிரிவான இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டை வாதிகள் நிரூபிக்கவில்லை என்று குறிப்பிட்டு நீதிவான் என்.படபெந்திகே வழக்கைத் தள்ளுபடி செய்தார். (எ)

# கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் கொரோனா தொற்றால் மூடப்பட்டது

சிலாபம்,ஏப்.24

சிலாபம், பொலிஸ் நிலையம் நேற்றுக் காலை முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்த பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

தற்போதைய நிலையில் கொஸ்வத்தை பொலிஸ் நிலைய கடமைகள் பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றில் இடம்பெற்று வருகின்றன. (எ)

### விலங்குகள் தீவனத்துக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க கோரிக்கை

கொழும்பு,ஏப்.24

கோழி இறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலையை விதித்த அதேவழியில் விலங்குகளின் தீவனத்துக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழி உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சியாக விலங்குகளுக்கு பெற்றுக்கொடுக்கும் உணவுகளின் விலைகள் உயர்ந்து வருவதால் சிறு மற்றும் நடுத்தர கோழி வர்த்தகர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதாக அதன் தலைவர் மைத்திரி பொன்சேகா தெரிவித்தார். (எ)

# கைதிகளை பார்வையிட இரு வாரங்களுக்கு தடை

கொழும்பு,ஏப்.24

இன்று முதல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (எ)

## விமானப் பயணிகள் மூலம்

# நாட்டுக்குள் கொரோனா வைரஸ் நுழைவதை தடுக்க நடவடிக்கை

கொழும்பு,ஏப்.24

விமானப் பயணிகள் மூலம் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் பயணிகள் ஒன்றிணைவதைத் தடுப்பதற்கான விஷேட வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சகல விமானப் பயணிகளும் சுகாதார சட்டங்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.



அத்தியாவசிய விமானப் பணியாளர்களை மாத்திரம் இன்று தொடக்கம் சேவைக்கு அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# கொரோனா நோயாளர் அதிகரிப்பு புதிய வகை வைரஸ் காரணமா?

கொழும்பு,ஏப்.24

நாடு பூராகவும் பல்வேறு பிரதேசங்களில் தற்போதைய நிலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகமாகப் பதிவாகி வருகின்ற சூழலில்

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோய் எதிர்ப்பு மற்றும் கல உயிரியல் நிறுவனம், கொரோனா வைரஸ் குறித்து புதிய சோதனைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, விரைவில் புதிய பரிசோதனைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் பணிப்பாளர், மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார். சாதாரண பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் இலங்கையில் பரவும் புதிய கொரோனா வைரஸை அடையாளம் காண முடியாமையால் இந்தப் புதிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, அமெரிக்கா, பிரிட்டன், தென்னாபிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் வேகமாகப் பரவி வரும் வைரஸ் இலங்கையினுள் பரவியுள்ளதா? என்பது தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரிசோதனைகளின் மூலம் மிகக் குறுகிய காலத்தில் முடிவுகளைத் பெற்றுத்தர முடியும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய மருத்துவமனையில் தீ: 13 கொரோனா நோயாளர் பலி!

மும்பை, ஏப். 24

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் - விரார் பகுதியில் இயங்கி வந்த கொரோனா சிகிச்சை மையத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த 13 நோயாளிகள் தீயில் கருகி உயிரிழந்தனர்.

இந்தத் தீ விபத்தில் மேலும் பலர் காயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளனர். இதனால், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மும்பை புறநகர் பகுதியான விரார் பகுதியில் உள்ள விஜய் வல்லப் கொரோனா சிகிச்சை மருத்துவமனையிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தை அடுத்து சாதாரண நோயாளிகள் தப்பியோடினர். ஆனால், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் தப்பமுடியாமல் போனது. இதனால் அவர்கள் உடல் கருகிப் பலியாகினர்.

இதேவேளை, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தனது இரங்கல்களை பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். அத்துடன், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# மோசமடைகிறது மியன்மார் நிலவரம் பல இலட்சம் பேர் பட்டினி அபாயத்தில்!

யங்கூன், ஏப். 24

மியன்மாரில் பல இலட்சம் மக்கள் பட்டினிக்கு தள்ளப்படும் அபாய நிலை உருவாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

மியன்மாரின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிய பின்னர், நாட்டின் நிதி நெருக்கடி அதிகரித்துள்ளது. அத்துடன், உணவுப் பாதுகாப்பு இன்மையும் கடுமையாக அதிகரித்து வருகின்றது. இதனிடையே, உற்பத்தி, கட்டுமானம், சேவைகள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் தொழில் இழப்புகளும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன. இதனால், அடுத்த 3 தொடக்கம் 6 மாதங்களில் 34 இலட்சம் மக்கள் உணவைப் பெறுவதற்காக போராடும் நிலைமை உருவாகும் என்று உலக உணவு திட்டம் கூறுகின்றது.

முன்னதாகவே, ஏராளமான ஏழை மக்கள் வேலை வாய்ப்பை இழந்து விட்டனர். அவர்களால் உணவைப் பெற முடியவில்லை என்று அந்த நாட்டுக்கான உலக உணவு திட்டத்தின் இயக்குநர் ஸ்ரீபன் அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பெப்ரவரி மாத இறுதியில் இருந்து அரிசி 5 வீதத்தாலும், சமையல் எண்ணெய் 18 வீதத்தாலும் விலை உயர்ந்துள்ளன. தலைநகர் யங்கூனில் உணவை தவிர்த்தல், குறைந்த உணவை உட்கொள்ளல், கடன் பெறுதல் போன்றவற்றை அவதானிக்க முடிகின்றது என்று கூறப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி மியன்மாரின் ஆட்சியை இராணுவம் பிடித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றை அரசு வலிந்து அடக்கி வருகின்றது. அத்துடன், 700இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டங்கள் நாட்டின் வங்கியியல் முறையை நெருக்கடிக்கு தள்ளியுள்ளன. இதனால், வணிகங்களுக்கு பணம் செலுத்த முடியவில்லை. வெளிநாடுகளில் இருப்போர் அனுப்பும் பணத்தையும் மக்கள் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. பலரும் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தை நம்பியுள்ளனர். இது நாட்டின் நிலைமையை மேலும் மோசமடிக்கு தள்ளியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



தலைநகர் யங்கூனில் உணவகம் ஒன்றின் முன்னுள்ள குப்பைத் தொட்டியில் உணவு தேடும் ஏழைப்பெண் ஒருவர்...!

# இந்தியாவில் தொற்று பரவல் தொடர்ந்தும் உச்ச நிலையில்!

## 2,263 பேர் நேற்று மரணம்

புதுடில்லி, ஏப். 24

இந்தியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு நேற்று (காலை 6 மணி வரை) ஒரேநாளில் 3 இலட்சத்து 32 ஆயிரத்து 730 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் 3 இலட்சத்து 14 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதியான நிலையில் நேற்று இரண்டாவது நாளாக 3 இலட்சத்துக்கு அதிகமான தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் பி.1.617 எனப் பெயரிடப்பட்டுள்ள வேகமாகப் பரவும் ஆபத்தான இரட்டை திரிபு வைரஸால் தொற்று நோய் கட்டுப்பாட்டை நாடு இழந்துள்ளது. பெரும்பாலான மருத்துவமனைகள் கொரோனா தொற்று நோயாளர்களால் நிரப்பியுள்ளன.

அத்துடன், ஒட்சிசன் தட்டுப்பாட்டால் சுவாசக் பிரச்னைகள் ஏற்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்படும் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பதிவான 3 இலட்சத்து 32 ஆயிரத்து 730 தொற்று நோயாளர்களுடன் நாட்டில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 695ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், இதுவரை இல்லாத அளவுக்கு ஒரேநாளில் நேற்று கொரோனாவுக்கு 2,263 பேர் உயிரிழந்தனர். இதனால் தொற்றுக்கு பலியானோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 920ஆக உயர்ந்துள்ளது. (ஐ)



# கொரோனாவை விரட்டுவதற்கு தீப்பந்தத்துடன் ஓடிய மக்கள்!

போபால், ஏப். 24

"ஓடு கொரோனா ஓடு" என்று கத்தியவாறு, கையில் தீப்பந்தம் ஏந்தியவாறு மக்கள் ஓடும் காணொலி சமூவலைத்தளத்தில் பிரபலமாகி வருகின்றது.

இந்தியாவில் கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. அங்கு தினசரி தொற்று பதிவு 3 இலட்சத்தை கடந்துள்ளது.

இந்நிலையிலேயே, மத்திய பிரதேசத்தின் அகர்மல்வா மாவட்டத்தில் கணேஷ்புரா கிராமத்தில் இரவு வேளை மக்கள், "ஓடு கொரோனா ஓடு" என்று ஹிந்தியில் கத்தியவாறு கையில் தீப்பந்தங்களுடன் ஓடியுள்ளனர். (ஐ)

# தாயாரை வெட்டிக் கொன்று உடலை சமைத்து உண்ட மகன்!

மட்ரிட், ஏப். 24

பெற்றெடுத்த தாயாரை துண்டுதுண்டாக வெட்டிக் கொன்று, அவரின் உடலை சமைத்து உண்ட மகன் குறித்து அதிர்ச்சி சம்பவம் வெளியாகியுள்ளது.

ஸ்பெயின் நாட்டிலேயே இந்தக் குரூர சம்பவம் பதிவாகியுள்ளது. இது குறித்து அந்நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அல்பர்டோ என்ற இளைஞர் ஒருவர் கடந்த 2019 பெப்ரவரியில் கைது செய்யப்பட்டார். அவரின் தாயாரான மரியா சோலேடாட் கோமெஸ். அந்த இளைஞர் தாயாரை அடித்து துன்புறுத்துகிறார் என்று அவரின் நண்பர் ஒருவர் பொலிஸில் முறையிட்டார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸார் தாயரின் வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு, அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து அங்கிருந்த மகனை பொலிஸார் கைது செய்தனர். இதன்போது அவர், தனது தாயாரை கழுத்தை நெரித்துக் கொன்றார் என்றும் உடல் பாகங்களை சமைத்து உண்டதுடன் நாய்க்கும் போட்டதாகவும் கூறியுள்ளார்.

தொடர்ந்த விசாரணைகளில், சிறு பிளாஸ்ரிக் பெட்டிகளில் அடைக்கப்பட்ட உடல் பாகங்களும் மீட்கப்பட்டன என்று கூறப்பட்டது.

இதேவேளை, தனது தாயை கொலை செய்தது குறித்தோ, அவரின் உடலை சமைத்து சாப்பிட்டது குறித்தோ தனக்கு நினைவில்லை என்று அல்பர்டோ நீதிமன்றில் கூறியுள்ளார். அவர் கைது செய்யப்பட்டபோது மனநிலை பாதிக்கப்பட்டதுடன், போதைப் பொருளுக்கும் அடிமையாகியிருந்தார் என்றும் அந்த செய்திகளில் கூறப்பட்டுள்ளன. (ஐ)

# பாரிஸ் ஊடாக பெல்ஜியம் சென்ற மாணவர்களுக்கு இந்திய வைரஸ்!

பாரிஸ், ஏப். 24

இந்தியாவை உலுக்கி வரும் இரட்டைத் திரிபு வைரஸால் பீடிக்கப்பட்ட மாணவர் குழு ஒன்றை அடையாளம் கண்டுள்ளதாக பெல்ஜியம் நாட்டின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த 12 ஆம் திகதி இந்தியாவில் இருந்து விமானம் மூலம் பாரிஸ் சார்ள்து ஹோல் விமான நிலையத்தை வந்தடைந்த சுமார் 43 தாதிய மாணவர்கள் அடங்கிய குழுவில் இருபது பேருக்கே இந்தியத் திரிபு வைரஸ் தொற்று அறிகுறி காணப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் பஸ் ஒன்றின் மூலம் பாரிஸில் இருந்து பெல்ஜியம் சென்றடைந்த பின்னர் ஐந்து நாட்களில் அவர்களில் பலருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளது. அவர்களில் வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட இருபது பேர் அங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெல்ஜியத்தில் தாதியர் பயிற்சிக்காக வந்த இந்திய மாணவர் குழுவினரே இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகி இருக்கின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் போராட்டதை நீர்த்துபோக செய்யும் செயல்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் குற்றச்சாட்டு!

வவுனியா, ஏப். 24

"உயிர்ப்புடன் உள்ள தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப்போக செய்வதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயல்படுகின்றன", என்று வவுனியாவில் தொடர் போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் குடும்பங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் இன்று நடைபெறவுள்ளது. இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியது. இதிலேயே, அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அத்துடன், "மன்னாரில் இருந்து இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை நாளை (இன்று) கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்துள்ளது. மகஜர் ஒன்று தங்களால் வழங்கப்படப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்திற்கு வழங்கப்போவதாக சிலரிடமும், தூதரகங்களுக்கு வழங்கப்போவதாக சிலரிடமும் மாறிமாறி தெரிவித்துள்ளனர். அதில் உண்மைத்தன்மை இல்லை. இது பாதிக்கப்பட்ட மக்களை திசை திருப்பும் விடயமாகத்தான் இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் அந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்வதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

"அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டோரை காட்டி காசு உழைக்கும் இயந்திரங்களாக மாறிவிட்டன. இவை நிதிகளைப் பெற வேண்டுமானால், இலங்கை அரசின் அனுமதியுடனேயே பெறமுடியும். இவற்றால் இலங்கைக்கு எதிராக ஒரு போதும் செயல்படமுடியாது.

"கடந்த 12 வருடமாக பல்வேறு நிறுவனங்கள் வந்தன. நிமல்கா, பார்த்தசாரதி, சிங்கம், பிரிட்டோ பெர்னாண்டோ என்று பல தரப்புக்கள் வந்தன. இவை அனைத்தும் காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான தீர்வு ஆகியவற்றை நீர்த்துப்போகச்செய்து பணம் சம்பாதித்தார்கள்.

"தமிழர்களுக்கு எதிரான இவர்களின் சூழ்ச்சி 2009 முதல் தொடர்கின்றது. இது உயிர்ப்புடன் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களை அழிக்கும் சதியே. நாம் எப்போதும் நிதிக்காக போராடவில்லை. நீதிக்காகவே போராடுகின்றோம்.

"இவர்களால் வழங்கப்படும் மகஜரில் என்ன உள்ளது. யாருக்கு அந்த மகஜர்களை கொடுப்பார்கள் என்று எவருக்கும் தெரியாது. அதற்கான நிதி சீனாவினுடையதாக கூட இருக்கலாம். எனவே மக்கள் விழிப்புடன் இருங்கள் விழிப்பே ஓர் இனத்தை பாதுகாக்கும்", என்றும் கூறப்பட்டது. (ஐ)

# ஊழல் செய்தேன் என்று நிரூபித்தால் அமைச்சு பதவியை உடன் துறப்பேன்!

## வர்த்தக அமைச்சர் பந்துல சபதம்

கொழும்பு, ஏப். 24

சதொச உட்பட புத்தாண்டு காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கிய சலுகை பொதிகளில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன என நிரூபித்தால் அமைச்சுப் பதவியை ஒரு மணி நேரத்தில் துறந்து செல்வேன் என்று வர்த்தக அமைச்சர் பந்துல அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பரிமாற்றங்கள் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கில் 12 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய சலுகை பொதியொன்று சதொச உட்பட சுப்பர் மார்க்கெட்கள் ஊடாக வழங்கினோம்.

ஆனால், இந்த பொதியில் தரமற்ற பொருட்கள் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களை கைதுசெய்துள்ளதாகவும் கூறுகின்றனர். மக்களுக்கு வழங்கும் சலுகைகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக சமூக நீதிக்கான இயக்கம் கொம்பனி வீதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சதொச நிறுவனத்தின் தலைவர், கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர், தேயிலை வழங்குனர்



சபையும் கொம்பனிவீதி பொலிஸில் இதுதொடர்பில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார். சலுகை பொதியில் ஊழல் - மோசடிகள் இடம்பெற்றிருப்பது நிரூபிக்கப்பட்டால் ஒரு மணித்தியாலம்கூட பாராளுமன்றத்தில் இருக்க மாட்டேன் என்பதுடன் பதவியை இராஜினாமா செய்துவிட்டு செல்வேன். மனசாட்சிக்கு உட்பட்டு அர்ப்பணிப்புடன் நாம் செயல்படுகின்றோம். ஆகவே, நான் எவரையும் கைது செய்யுமாறு கூறவில்லை - என்றார். (ஐ)

# பிரதான ஊடகங்களுக்கும் நாளை அச்சுறுத்தல் நேரும்!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 24

அரசாங்கத்தால் தற்போது சமூக ஊடகங்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் எதிர்காலத்தில் பிரதான ஊடகங்களுக்கும் ஏற்படும். ஊடகங்களை மாத்திரமின்றி மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகளின் குரலையும் முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் உரையாற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்ளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து கடந்த காலங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யவே வலியுறுத்துகின்றோம்.

இதேவேளை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை கேள்விக்குள்ளாக்கி , நீதித்துறை சுயாதீனத்தை கேள்விக்குறியுள்ளாக்கி உள்ளனர். அத்தோடு பாராளுமன்றத்தில் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கேள்வியெழுப்புவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமை ஆகும். ஆனால், தற்போது பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு எதிராகவும் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடளிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தினுள் பாதுகாப்பு இல்லாமலாக்கப்படும்போது , மக்களின் பாதுகாப்பிற்கு எவ்வாறு உத்தரவாதமளிப்பது? தற்போது சமூக ஊடகங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் எதிர்வரும் காலங்களில் பிரதான ஊடகங்களுக்கும் ஏற்படும். இவ்வாறு எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் , உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கு இலட்சக்கணக்கான ஹறின் பெர்னாண்டோக்களை உருவாக்க நாம் தயாராகவுள்ளோம் - என்றார். (ஐ)

# அரச வங்கி முறைமை வலுவாக பராமரிக்கப்படுவது அவசியம்

## பிரதமர் மஹிந்த சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 24

அரச வங்கி முறைமை வலுவாக பராமரிக்கப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் பாராளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து குறிப்பிட்டார்.

பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விரிவான கலந்துரையாட லொன்றின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால் மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் அரச வங்கி முறையை வலுவாக பராமரித்தல் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இச்சந்திப்பு இடம்பெற்றது.

1996ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு, 2014ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் மீண்டும் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இதன்போது பிரதமர் மஹிந்தவுக்கு நன்றி கூறினர்.

ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் தொடர்ந்து நிலவும் பிரச்னைகளை தீர்ப்பது குறித்தும் இதன்போது பிரதமரால் கவனம் செலுத்தப்பட்டது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரச வங்கிகளில் தற்போது நிலவும் பிரச்னைகளை தீர்க்க எதிர்காலத்தில்



நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பிரதமரின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க, பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் நிசாந்த சமரசிங்க, தலைமை செயலாளர் ஏ.கே. பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# நான்கு நாட்களில் மட்டும் 1263 கிலோ மஞ்சள் மீட்பு!

கொழும்பு, ஏப். 24

வடமேற்கு மற்றும் மேற்கு கடற்பரப்பு ஊடாக 17 முதல் 20ஆம் திகதி வரை நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 1,263 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார், வங்காலை மற்றும் நுரைச்சோலை, தலுவ கடற்கரை பிராந்தியங்களில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களின் போது 14 சாக்கு பொதிகளில் பொதியிடப்பட்ட 807 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டன.

இதேபோல, நீர்கொழும்பு முன்னக்கரைப் பகுதியில் வைத்து14 சாக்கு பொதிகளில் பொதியிடப்பட்ட 461.5 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன் இரண்டு சந்தேக நபர்களை மேற்கு கடற்படை பிராந்திய கட்டளையகம் கைதுசெய்தது.

இதேசமயம், வட மத்திய கடற்படையினரால், 15 சாக்கு பொதிகளில் பொதியிடப்பட்ட 543.7 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, பேசாலை கடற்கரைப் பகுதியில் 258.5 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைவாதம் தொடர்பில் 2 வாரத்துக்குள் நடவடிக்கை

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து



கொழும்பு,ஏப்.24

மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இரண்டு வார காலத்துக்குள் அரசாங்கம் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். இல்லாவிடின் மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுக்கொள்கைக்கு அமைய செயல்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஒற்றையாட்சிக்கு ஆதரவான சுமந்திரனின் குடியுரிமையையும் பறிக்க அரசு திட்டம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



**கொழும்பு,ஏப்.24**

**எம். ஏ. சுமந்திரனுக்கு இன்றும் சர்வதேச புலிப் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. ஒற்றையாட்சிக்கு ஆதரவாகச் செயல்படும் ஒரு தலைவர். அவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்கி பிரபாகரன் போன்றவர்களை உருவாக்குவதா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.**

2015ஆம் ஆண்டு அரசாங்கத்தை உருவாக்கிய எதிர்க்கட்சியின் முக்கிய அரசியல்வாதிகளின் குடியுரிமையை இல்லாமலாக்கி அரசியல் பழிவாங்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆனால், ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியையும் மேற்கொள்வதில்லை. அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்குவர வழிசமைத்த சஹ்ரானின் படங்களை காட்சிப்படுத்தி பாராளுமன்றத்தில் கொண்டாடியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் 2015 முதல் 2019 நவம்பர் மாதம் 19ஆம் திகதிவரையான காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் அரசாங்கம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்க திட்டமிட்டிருப்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லர் போன்று செயல்படவேண்டும் என அரசாங்கத்தில் இருக்கும் சிலர் தெரிவிக்கின்றனர். ஹிட்லர் அன்று ஓர் இரவில் தனது அரசியல் விரோதிகள் அனைவரையும் இல்லாமாக்கி இருந்தார். அதேபோன்று இந்த அரசாங்கம் ஒரு அறிக்கை மூலம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்க திட்டமிட்டிருக்கின்றது.

மேலும், ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கப் போவதாக தெரியவருகின்றது.

எதிர்க்கட்சியில் இருக்கும் ஒரு தலைவர் தான் அநுரகுமார திஸநாயக்க. அவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி அவரது அரசியல் நடவடிக்கையை நிறுத்த முடியாது.

அதேபோன்று இரா. சம்பந்தனின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி வடக்கு மக்களுக்கு அரசாங்கம் எதை சொல்லப் போகின்றது. ஜனநாயக முறை சரியில்லை, மீண்டும் ஆயுதம் தூக்கவா? தெரிவிக்கப்போகின்றீர்கள்? மேலுமொரு பிரபாகரனை உருவாக்கப்போகின்றீர்களா?

மேலும், எம். ஏ. சுமந்திரனுக்கு இன்றும் சர்வதேச புலிப் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. ஒற்றையாட்சிக்கு ஆதரவாகச் செயல்படும் ஒரு தலைவர். அவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்கி பிரபாகரன் போன்றவர்களை உருவாக்குவதா? அரசாங்கத்தின் திட்டம்.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவராக ரவூப் ஹக்கீம் ஒரு நடுவு நிலையான ஜனநாயகத் தலைவர். முஸ்லிம் அடிப்படைவாதிகள் தொடர்பில் அரசதரப்பினர் அதிகம் பேசுகின்றனர்.

ரவூப் ஹக்கீம் போன்ற தலைவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்கி, சஹ்ரான்களை உருவாக்கப்போகின்றதா?. அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் பல தடவைகள் பிரதமராகச் செயல்பட்ட தலைவர். அவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்குவதன் நோக்கம் என்ன?

அதேபோன்று எதிர்க்கட்சியில் இருக்கும் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் தான் 2015 ஆம் ஆண்டு அரசாங்கம் உருவாகுவதற்கு பிரதானமாக செயல்பட்டவர்கள்.

அதனால் தான் அவர்களைப் பழிவாங்கும் நோக்கில் அவர்களது பிரஜா உரிமையை இல்லாமலாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஆனால், ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சிக்கவில்லை. அதற்கு மாறாக சஹ்ரான் உட்பட குழுவின் படத்தை பாராளுமன்றத்தில் காட்சிப்படுத்தி கொண்டாடினார்கள். இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிசமைத்தமைக்காக இவர்கள் சஹ்ரானை கொண்டாடினார்கள்- என்றார். (எ)

# துறைமுக நகரின் உரிமையாளர்கள் எமது மக்களாகவே இருக்க வேண்டும்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



கொழும்பு,ஏப்.24

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தியை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கவில்லை. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தையே எதிர்க்கின்றோம். 2019, 2020 இல் தயாரிக்கப்பட்ட சட்ட மூலங்களில் கொழும்பு துறைமுக நகரில் அரசாங்கத்துக்கும் உரிமை காணப்பட்டது.

எனினும், தற்போதைய சட்ட மூலத்தில் அது நீக்கப்பட்டுள்ளது. துறைமுக நகரின் உரிமையாளர்கள் இலங்கை மக்களாகவே இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநாட்டவர்களாகக் கூடும் என்று ஜனாதிபதியின் சட்டத்தரணி ஏற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் தற்போது காணப்படுகின்ற ஆணைக்குழுக்களிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். துறைமுக நகரம் தொடர்பான சகல அதிகாரங்களும் இந்த ஆணைக்குழுவிற்கே உரித்தானதாகும். ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பத்துக்கமையவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும்.

2019 இல் இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் அரச பதவி வகிக்கின்ற அதிகாரிகளே இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு காணப்பட்டது என்றார். (எ)

# அடிப்படைவாதிகள் மீள தாக்குதல் நடத்த இலங்கையில் இடமளிக்கப் போவதில்லை

## பாதுகாப்பு செயலாளர் திட்டவட்டம்

கொழும்பு,ஏப்.24

அடிப்படைவாதிகளால் மீண்டுமொரு தாக்குதலை நடத்துவதற்கு முயற்சிக்கப்பட்டாலும் அது இலகுவானதல்ல. அவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியாதளவுக்கு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அடிப்படைவாதிகள் ஏதேனுமொரு செயல்பாட்டை முன்னெடுக்க முயற்சிக்கக்கூடும். ஆனால், எமது புலனாய்வுப் பிரிவு சிறப்பாகச் செயல்படுகின்ற வரை அவர்களால் எந்த செயல்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது. அத்தோடு பொலிஸார் மற்றும் முப்படையினரும் இதுதொடர்பில் மிக அவதானத்துடனேயே உள்ளனர்.

எனவே, அடிப்படைவாதிகளால் அவ்வாறானதொரு செயல்பாட்டினை முன்னெடுப்பது இலகுவானதல்ல. அதற்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இளைஞர்களை இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடத் தூண்டும் வகையில் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள புத்தகங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு, நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட புத்தகங்கள் சுங்கத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. பொறுத்தமற்ற விடய உள்ளடக்கங்கள் காணப்படுகின்ற பாடசாலை புத்தகங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏனைய மதத்தவர்களை அழித்தல் உள்ளிட்ட விடயங்கள் இவ்வாறான புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் கல்வி அமைச்சின் செயலாளருடன் இது தொடர்பில் விஷேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. இதுதொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற புத்தகங்கள் மாணவர்களிடமும் பொது மக்களிடமும் செல்வது தடுக்கப்பட்டுள்ளது- என்றார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# துறைமுக நகரால் பூகோள ரீதியில் நாட்டுக்கு போட்டித்தன்மை ஏற்படும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.24

கொழும்பு துறைமுக நகரத்தை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் இலங்கை எதிர்காலத்தில் பூகோள மட்டத்தில் அதிகாரமிக்க நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் போட்டித்தன்மைக்கு முகங்கொடுக்க நேரிடும். இதனால், பாரிய விளைவுகளையும் இலங்கை எதிர்நோக்க நேரிடும்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வெள்ளை யானை அபிவிருத்திப் பணிகளைப் போன்றே துறைமுக நகர திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு காணப்பட்டது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த திட்டமிடல்களால் கொழும்பு துறைமுக நகரம் இலங்கைக்கு முழுமையாக 2016 ஆம் ஆண்டு சொந்தமாக்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



# மும்பையை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது பஞ்சாப்!

சென்னை, ஏப். 24

கே. எல். ராகுல், கிறிஸ் கெயிலின் பொறுப்பான ஆட்டத்தால் மும்பை அணியை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது பஞ்சாப் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று இரவு நடந்த போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை அணியும், கே. எல். ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கே. எல். ராகுல் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு குயின்ரன் டி கொக், ரோஹித் சர்மா இணை தொடக்கம் கொடுத்தனர். ஹூடாவின் பந்தில் 3 ஓட்டங்களுடன் கொக் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வந்த இஷான் கிஷன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களம் புகுந்த, சூரிய குமார் யாதவ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ரோஹித் சர்மா 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களை குவித்து சிராஜின் பந்தில் அலனிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து, ஹார்திக் பாண்ட்யா 1, குர்னல் பாண்ட்யா 3 என் ஆட்டமிழக்க தடுமாறிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்களைப் பெற்றது.

கிரன் பொலார்ட் ஒரு சிக்ஸருடன் 16 ஓட்டங்களையும், ஜயந்த் யாதவ் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பஞ்சாப்பின் பந்துவீச்சில் முஹமட் சமி, ரவி பிஸ்னய் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், தீபக் ஹூடா, அர்ஷ்தீப் சிங் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 17.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து இலகுவாக 132 ஓட்டங்களைப் பெற்றது.

கே. எல். ராகுல் - மயங்க் அகர்வால் இணை தொடக்கம் கொடுத்தது. பவர்பிளே முடிவு வரை நிலைத்த இந்த இணை, 7.2 ஓவர்களில் 53 ஓட்டங்களைப் பெற்ற போது பிரிந்தது. மயங்க் அகர்வால் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ராகுலுடன் இணைந்த கிறிஸ் கெய்ல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி பஞ்சாப் அணியை வெற்றி இலக்கை அடைய வைத்தார்.

இறுதிவரை கே. எல். ராகுல் 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களையும் கிறிஸ் கெயில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 43 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

மும்பையின் பந்துவீச்சில், ராகுல் சாகர் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக கே. எல். ராகுல் தெரிவானார். (ஐ)

# பங்களாதேஷுடனான டெஸ்ட்: இலங்கை தடுமாற்றம்

கண்டி, ஏப். 24

திமுத் கருணாரட்ன, திரிமன்னேயின் அரைச்சதங்களின் உதவியால் இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி கண்டியில் இடம்பெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 541 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது பங்களாதேஷ் அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. முஸ்பிஹூர் ரகீம் 43 ஓட்டங்களுடனும், லிதொன் டாஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் சற்று அடித்தாட ஆரம்பித்தனர். டாஸ் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஹசன் மிராஷ் 3, தைஜூல் இஸ்லாம் 2 என்று ஆட்டமிழந்தனர்.

173 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 541 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

முஸ்பிஹூர் ரகீம் 68 ஓட்டங்களையும், தஸ்கின் அஹமட் 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்களையும், சுரங்க லக்மால், லஹிரு குமார, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது இலங்கை அணி.

அணித் தலைவர் திமுத் கருணாரட்ன, லஹிரு திரிமன்னே தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடினர். திரிமன்னே 8 பௌண்ட்ரிகளுடன் 58 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஒஸத பெர்னாண்டோ 20, அஞ்சலோ மத்தியூஸ் 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் நிலைத்து ஆடிய கருணாரட்னவுடன் தனஞ்சய டி சில்வா இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இலங்கை அணி 73 ஓவர்களை எதிர்கொண்டு 3 விக்கெட்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றபோது மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

திமுத் கருணாரட்ன 85 ஓட்டங்களுடனும், தனஞ்சய டி சில்வா 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தஸ்கின் அஹமட், ஹசன் மிராஷ், தஜூல் இஸ்லாம் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும். (ஐ)



# ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார் நடராஜன்!

சென்னை, ஏப். 24

ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்காக விளையாடி வரும் நடராஜன் ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார்.

முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக அவர் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

நடப்பு தொடரில், ஹைதராபாத் அணிக்காக 2 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். நடராஜன் சிகிச்சை முடிந்து விரைவில் திரும்பினாலும், அவர் 7 நாட்கள் உயிர் காப்பு குமிழியில் தனிமைப்படுத்த வேண்டும் என்பதால் தொடரில் பங்கேற்பது சாத்தியம் இல்லை என்று கூறப்படுகின்றது. (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்

6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்

7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர்
திருமதி .கோகிலா மகேந்திரன்

7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்

7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : TIK TOK

11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி

1.30 மணி : WEEK END MOVIE

4.30 மணி : காட்டூன் தமிழ்

5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)

6.00 மணி : எது சரி? எது பிழை -
மதத்தலைவர்களால் கொரோனா பரவலை
தடுக்க முடியுமா?



**இரவு**

7.00 மணி : சுப்பர் குறுாப்



8.00 மணி : இரவுச் செய்திகள்

09.00 மணி: சொல்லாடுகளம்-
வாசிப்பு பழக்கவழக்கம்

10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

07.00 மணி : இன்றைய சிந்தனை

07.05 மணி : இன்றைய நாள்

07.30 மணி : மங்கள இசை

08.00 மணி : அருளுரை

08.30 மணி : திருவாசகம்

09.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பாடல்கள்

10.30 மணி : பஜனை

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்

9.00 மணி : ஜெபமாலை

10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்

10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு

11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி

1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி

2.00 மணி : நற்சிந்தனை

3.00 மணி : பாடல்

4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்

4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org